பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஜூன் 2020



நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 | ஜூன் 2020

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸீா் ரஹ்மான்**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

## விரைவில் வெளிவரவிருக்கும் நூல்



# அன்பானத் தமிழ்நெஞ்சங்களே!

வணக்கம்!

நான் சோர்வடைந்து சில நேரங்களில் இதழை நிறுத்திவிடுவோம் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியதுண்டு. துவளும் நேரத்தில் எங்கிருந்தோ ஒரு புதிய எழுத்தாளன் தனது ஆக்கமொன்றை அனுப்பி வைத்து அதை இதழில் வெளியிடவிரும்பிக் கேட்டிருப்பான். அப்போது நான் நினைப்பதுண்டு. அவனுக்கு நான் ஊக்கம் தராவிட்டால் அவன் துவண்டு விடுவான். அதனால் அவனுக்காகவே, அவன் போன்ற புதிய எழுத்தாளருக்காகவே இதழைத் தொடர்ந்து இதழைக் கொண்டுவர வேண்டுமென்று நினைப்பேன். இதழைத் தொடர்வதில் பல பிரச்னைகள் இருந்தாலும் சோர்விலிருந்து என்னைநானே விடுவித்துக்கொள்வேன்.

வாழ்க்கையில் நாம் தடுமாறும்போதெல்லாம், நம்மைத்தூக்கிநிறுத்துவது நம் நம்பிக்கை மட்டுமே! தன்னம்பிக்கை இருக்கும் மனிதனால் மட்டுமே, வாழ்க்கையில் வெற்றி பெற்று சாதிக்க முடியும். ஒருமுறை தோல்விகளால் துவண்ட ஒருவனுக்குத் தற்கொலை செய்யும் எண்ணம் தோன்ற, அதற்கான வழிகளை யோசித்தபோது, பல வழிமுறைகள் மனக்கண் முன் வந்து போயினவாம். சற்றே திகைத்தவன், சாவதற்கே இத்தனை வழிகள் இருக்கையில், வாழ்வதற்கும்கூட வழிகள் இருக்குமே என்றெண்ணித் தன் தற்கொலை முயற்சியைக் கைவிட்டிருக்கிறான். தடைகள் இல்லாத பாதைகள் இல்லை. அதற்காக நாம் நடக்காமல் இருப்பதில்லை. வெற்றுப் புலம்பல்கள் எப்போதும் எமக்கு வெற்றியைத் தருவதில்லை.

எல்லாப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் நம்மிடமே உள்ளது. சில நேரங்களில், உடனடியாகத் தீர்வுகள் கிடைக்கும். பலநேரங்களில், தீர்வுக்கான காலம் சற்றே தள்ளிச் செல்லலாம். ஆனால், அதுவரை பொறுமை காப்பது அவசியம்.

எதிலும் எதிர்மறையான எண்ணங்கள் இருக்கவே கூடாது. வென்றவருக்கு எப்போதும் வரலாறு உண்டு. நம் வாழ்வு எப்போதும் பிறருக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். ஆகவே அதற்கேற்ப நடக்க முயல்கிறேன். நீங்களும் முயலுங்கள்!



இம்மாதம் ஜூன் 26 ல் எனது பிறந்தநாள் வருகிறது. எனது சோர்வில்லா இதழியல் பயணம் சீர்பெற்றுச் சிறப்பாக்கிட துணையாக வாருங்கள். நன்றி!

அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

# என்னில் கோபுரக் கலசமாய்



உன் விழியில் விழுந்த நொடி என்னிதயத்துள் காதல் வேர்விட்டதடி
உன் ஒற்றைப் பார்வையில் மனம் பித்தாகி நான் மயங்க
தூக்கம் தொலைத்த கண்கள் தூர்ந்தே போனதடி
நெற்றிப் புரளுமுந்தன் கற்றைக் குழலினில்
தூளி கட்டியாடத் துடிக்குதெந்தன் மனது
ஏழ்பிறப்பெடுத்து உனக்காக நானும்
ஏவல் செய்யவேத் தவிக்குதெந்தன் வயது

என் காதில் நீ வந்து உன் காதல் சொல்லச் சொல்ல
செவிகள் ரெண்டும் பூப்பூக்கும்
உயிருக்குள் ஏதோ ஒன்று தேன் வார்க்கும்
என் மோனத்தவம் கலைக்க மேனகையாய் வந்தவளே
சேதாரமில்லாமலெனைச் சேர்த்தணைத்துக் கொள்ளடி

உன் நேசப் பெருவெளியில் நெஞ்சம் நான் தொலைக்க
ஆழிப்பேரலையாயுன் நினைப்பு அலைக்கழித்துச் செல்லுதடி
உன் ஆழக்காதலெனை அணுஅணுவாய்க் கொல்லுதடி

ஞாயிற்றுத் தொகுதியிலே கோள்களெல்லாம் எனைச் சுற்ற
நானோ ஒற்றைச் சூரியனாய் உனை வலம் வருகின்றேன்
பரந்த வானாய் நீயிருக்க
உன்னில் சிறகு விரித்தே பறந்து செல்கிறேன்

சுற்றும் காற்றாய் அகிலமெங்கும் திரிந்தாலும்
உன்னில் வந்தே மையம் கொள்கிறேன்;

உயிரணுக்களில் நீ தானே பூக்கிறாய்
என்னுயிர் நூலிலே உன்னாயுள் கோர்க்கிறாய்
எண்ண அலைகளில் வந்து வந்து மோதியே
உன்னிடமேயெனைக் கரை சேர்க்கிறாய்

என் தேசங்களெல்லாம் உன் நேசங்கள் ஆள
கொலுவிருக்கிறாய் என்னில் கோபுரக் கலசமாய்
காதலின் தீபம் ஒன்று கண்களில் ஏந்திக்கொண்டு
காரிருள் நீக்க வந்த ஒளிச்சிற்பம் நீயடி
ஓருயிராகி ஒன்றிக் கலந்திடவே துடிப்பவன் நானடி

# வஃபீரா வஃபி



சந்திர ஒளியை உண்டு வாழும்  சாதகப் பறவை போலே
உன் காதலுண்டு வாழும் மோகப் பறவை நானே
உன் மடி கொடு நான் துயில உன்னிடைகொடு நான் தழுவ

என் பிரபஞ்சம் முழுவதுமே உயிர்க்க வைப்பதுவும்
இயக்கி வைப்பதுவும் உன் பேரன்பு தானடி
என் கோபக்கனலைக் கூட காதல் அதிர்வலையாய்
மின்மாற்றிச் செல்லுது உன் நேசக்காதலடி

என்னுயிர் இழைகளில் காதல் நெய்து  தடம் பதிக்கிறாய்
உயிர்க்கலங்களில் புத்துணர்வாகிக் குதிக்கிறாய்
செங்குருதியாயெ ந் தன் தேகமெங்கும் ஓடி
நாடி நரம்பெங்கும் நர்த்தனம் புரிகிறாய்

என்னிதயச் சுவரில் உயிரோவியமாய் உன் உருவே
என் அடி நெஞ்சில் நாதமாய் ஒலிப்பது உன் குரலே
அறுசுவையூட்டும் அற்புத விருந்தும் நீயடி
என் பிணி தீர்க்கும் அருமரு ந் தும் நீயடி

என் ஐம்புலன்கள் திறக்கும் அற்புத மந்திரமே
என் தேடல்களெல்லாம் நீயாகிப் போக
உள்ளுணர்வெங்கும் ஊடுருவும் உனை ரசிக்கிறேன் நானே

எனக்குள் ஆயிரம் பௌதீக மாற்றங்கள் நிகழ
நானாக நீயும்,  நீயாக நானும் போராடும் இக்களத்தில்
பொருதியே வெல்வோம் வாடி பெண்ணே

உன்னோடு நான் வாழ ஒரு பிறவி போதாது
காற்றுள்ளவரை  நானும் கலந்திருப்பேன் உன்னோடு
என்னுரிமை நீயாக, என்னுறவும் நீயாக
அன்பே நீயென்னை ஆட்கொள்ளும் நாள்வரை
என் காதல் மெய்ப்படக் காத்திருப்பேன் கண்மணி.



# தண்டவாளத்தில் ஓர் உயிர்

**கவிச்சிகரம். முத்துவிஜயன்**

அது மதுரையில் இருந்து ராமேஸ்வரம் போகிற பாசஞ்சர் ரயில். அந்த ரயிலோட டிரைவர் ஜான்சன்மற்றும் டீசல் அஸிஸ்ட்டண்ட் அழகர் எஞ்சினிலிருந்தார்கள். அது மதுரையில் 7மணி அளவில் கிளம்பி 12 மணிஅளவில் ராமேஸ்வரம் சென்றடையும். மதுரை ஜங்க்சனில் மூன்றாவது பிளாட்பார்த்தில் இருந்து கிளம்ப தயாராக இருந்தது.

டிரைவர் ஜான்சனும் அழகரும் இஞ்சினில் பேராமீட்டர் களைச்சோதனை செய்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். டீசல் அளவு வோல்டேஜ் ஆம்பியர் விசில் ப்ரேக எஞ்ஜின்ஸ்பீடு லூப் ஆயில் லெவல் எல்லாம் ஓகே. டிரைவர் பிளாஸ்க்கில் இருந்தடீயைசாப்பிட்டுக்கொண்டிருந்தார். சாப்பிட்டு விட்டு மீண்டும் வாங்கி வைத்துக் கொள்வதற்காக. இந்தா அழகர் உனக்கு ஒருகப் டீ என ஊத்தித்தந்தார். அதற்குள் டீ பாய் வர பிளாஸ்க்கை கழுவி டீ புல்லாக வாங்கிக்கொண்டார்

அப்போது பச்சை சிக்னல் விழ ஜான்சன் சிலுவைக் குறியிட்டு வணங்க அழகர் சாமியை கும்பிட்டு இஞ்சினைத்தொட்டுகும்பிட்டுவிட்டுலாங்க் விசில் ஒன்றைக் கொடுத்து வண்டியை கிளப்பினார்கள். பெருமூச்செடுத்து வண்டி மெல்ல டீசல் புகையைக் கக்கிக்கொண்டு, கிளம்பியது இடது புறமாகத்திரும்பி ராமேஸ்வரம் லைனில் பயணித்தது

அழகர் சைடில் பிளாட்பாரத்தில் பார்த்தார் யாராவது ஓடிவருகின்றார்களா என்று வயசாளிகள் வந்தால் வண்டியை ஸ்லோபண்ணுவார். யாருமில்லாததால் வண்டி நகரத்தொடங்கியது சிலைமான் தாண்டி வண்டி ஓடிக்கொண்டிருந்தது.

இஞ்சினின் வலப்பக்கம் டிரைவரும் இடப்பக்கம் அசிஸ்ட்டண்டும் பார்த்துக் கொள்வார்கள். கேட் வந்தால் விசிலடிக்க வேண்டும். முன்னே இருக்கும் தண்டவாளங்களில்ஏதேனும்தேவையில்லாத பொருள்இருக்கிறதாஎன்றுபார்க்கவேண்டும். சிலசமயம் பாறைகள் உருண்டு நிற்கலாம், மாடுகள் கூட்டமாக நிற்கும். அப்போதெல்லாம் விசிலடித்து எச்சரிக்கை செய்யவேண்டும் சிலநேரங்களில் ஓரமாக நின்று கொண்டிருக்கும் ஆடுகள் அல்லது நாய் சடாரென்று குறுக்கே வந்துவிடும். அவ்வளவுதான் காப்பாற்ற முடியாது, தூரத்தில்பார்த்தால்வண்டியைஸ்லோசெய்து விசில் கொடுத்து அப்புறப்படுத்தலாம். சில மனிதர்கள் தண்டவாளத்தில்

செல்போனில் பேசிக்கொண்டு நடந்து பலியாயிருக்கின்றார்கள். அப்போ தெல்லாம் வண்டிஓட்டுபவர்கள் மனம் நொந்து அழும்

அன்று அதுபோல மானாமதுரை பரமக்குடி தாண்டி வண்டி போய்க் கொண்டிருந்தது

இரண்டாவது கப் டீயை ஜான்சன் சாப்பிட்டுக்கொண்டிருந்தார் அழகர் வெளியே தண்டவாளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். தண்டவாளத்தில் தூரத்தில் ஏதோ ஒரு மூட்டைபோலத் தெரிந்தது. சில சமயங்களில் பிளாஸ்டிக் பொறுக்குபவர்கள் அதுபோல வைத்து ரயில் பாதையில் பொறுக்கிக் கொண்டிருப்பார்கள். எனவே அழகர் எச்சரிக்கை விசில் கொடுத்தார், ஆனால் பக்கத்தில் ஆட்கள் யாரையும் காணவில்லை. வழக்கமாக இதுபோன்ற சமயங்களில் வண்டி நிறுத்த மாட்டார்கள்

ஆனால் அழகர் உற்றுப்பார்த்தபோது மூட்டை அசைவதுபோல் தெரிந்தது. உடனே ஜான்சனை எச்சரிக்கை செய்தார், ஏதோ உள்ளே உயிர் உள்.ள பொருள் உள்ளது என

ஆனால் ஜான்சன் வண்டி ஆடுவதால் அப்படித் தெரிகின்றது என்றார். ஆனால் அழகர் தன்னிடமிருந்த பைனாகுலர் கருவியை எடுத்து உற்றுப் பார்த்தார்.

விசில் கொடுத்தார். மூட்டை வேகமாக ஆடத்தொடங்கியது. ஜான்சனிடம் சொன்னார் சந்தேகமில்லாமல் உள்ளே பிரச்சனை இருக்கிறது எனறு, உடனே கார்டுக்குதகவல்கொடுத்துவிட்டுவண்டியை ஸ்லோ பண்ணினார்கள். மூட்டைக்கு அருகே வண்டியை நிறுத்திவிட்டு அழகர் குதித்து ஓடினார் மூட்டை அருகேமூட்டை வேகமாக ஆடிக்கொண்டிருந்தது ஜான்சன் எஞ்சினில் இருக்க அழகர் மூட்டையைப் பிரித்தார்

உள்ளேகைகால்கட்டப்பட்டுவாயில் பிளாஸ்த்திரி ஒட்டிய நிலையில் ஒரு பெண் 28 வயதிருக்கும் நடுங்கிக்கொண்டிருந்தார். அதற்குள் கார்டு ரயில்வே போலீஸ் எல்லாம் வந்துவிட அந்தபெண்ணை மீட்டு கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டு வாய் பிளாஸ்த்திரி அகற்றியபோது நடுங்கிக்கொண்டு மரண பயத்தில் இருந்தாள்.

அழகர் ஓடிப்போய் இஞ்சினில் இருந்து எடுத்துவந்து முதலில் இந்த தண்ணியை சாப்பிடு என்று கொடுத்து ஒருகப் டீயையும் கொடுத்தார் அப்போது தான் அவளின் படபடப்பு அடங்கியது. அவள் கையெடுத்துக்கும்பிட்டாள் ஓடிவந்து அழகர் காலில் விழுந்தாள் அய்யா நீங்கள் கடவுள் மாதிரி வந்து காப்பத்துனீங்க என்று கண்ணீரோடு. பின் விசாரணையில் தெரிந்தது அவளின் மாமியாரும் கணவனும் வரதட்சணை பிரச்சனையால் இதுபோல் செய்தார்கள் என்று அவர்களை கைது செய்யப்பட்டு வழக்குதொடர்ந்தது தனிக்கதை

இப்பொழுது ஜான்சன் அழகரை அழைத்துப் பாராட்டினார். உனக்கு மட்டும் எப்படி தெரிகிறது இதுவெல்லாம். என்ன இருந்தாலும் ஒரு உயிரைக்கொல்வதில் இருந்து காப்பாற்றியமைக்கு ஜீசஸ்க்கு ஸ்தோத்திரம் என்று சொல்லி சிலுவை குறியிட்டுக்கொண்டார்.

அழகரும் அடுத்தமாதம் வைகையில் இறங்கவிருக்கும் கள்ளழகருக்கு நன்றி சொன்னார். இந்த உயிகாக்கும் சிந்தனையை தந்து பழியில் இருந்து காத்தமைக்காக.

மீண்டும் ரயில் லாங்க் விசில் கொடுத்து ராமேஸ்வரம் நோக்கிப் பயணித்தது

அழகர் மீண்டும் தண்டவாளத்தை கண்காணிக்கத்தொடங்கினார்.

■

## ஜோக்

பெண் வீட்டுக்காரங்கள பார்த்து
ஒன்னு சொல்லிக்கிறேன்.

எனக்கு பொண்ணு கொடுத்தா
உங்க பொண்ணு நல்லா
இருக்கும்..

குடுக்கலன்னா
நான் நல்லா இருப்பேன்..

ச. இராஜ்குமார்
திருப்பத்தூர்

# இலாவணி

பண்டுமுதல் நம்மினத்தின்
  பாவலர்கள் தொன்மரபைப்
  பக்குவமாய்க் காத்தனரே
  அண்ணா அண்ணா... !

இன்றதனை விட்டுவிட்டோம்
  ஏனுடனே மீட்கவில்லை!
  ஏதுமிலார் வைத்தகொள்ளிக்
  கண்ணா கண்ணா...?

சிந்தனையில் நின்றிருக்கும்
  செந்தமிழைச் சீர்குலைக்கச்
  செற்றைகளொன் றாகுமிங்குப்
  பாரீர் பாரீர்..

வந்துரைத்த பொய்க்கதைகள்
  மட்டமென நன்குணர்ந்து
  வண்டமிழைக் காப்பதற்கு
  வாரீர் வாரீர்..

மூலமாக நின்றவற்றை
  முற்றிலுமாய்த் தீயிலிட
  முன்னோர்களைத் தூண்டியது
  யாரோ யாரோ..

காலமதை நன்குணர்த்திக்
  காட்டுகிற வேளையினில்
  கண்ணயர்ந்து றங்குவது
  நேரோ நேரோ..

பைந்தமிழைக் கற்றளிக்கும்
  பாவலர்க ளுள்ளவரை
  பாவிகட்குக் கேடுகாலம்
  நண்பா நண்பா ..

நைந்துபோன நம்மினத்தை
  நானிலத்தில் தேற்றுதற்கு
  நாளைமுதல் நீயெழுது
  வெண்பா வெண்பா..

**தர்மா**



## மரப்பாட்சி பொம்மை

எங்கள் வீட்டு
சௌமி குட்டிக்கு
தினந்தோறும் வேண்டும்
புதிதாய் ஒரு பொம்மை..!
திருவிழாக்களில்
தவறாமல் வாங்கும்
பல பொருட்களில்
ஒரு பொருள் "பொம்மை"..!
நேற்றைய பொம்மை
இன்று காலாவதியாகிவிடும்
என் மகள் கைபட்டால்...!
ஒரு போகி நாளன்று
பரணில் கிடந்த
"மரப்பாட்சி" பொம்மையொன்று
ஆபூர்வமாய்
கண்டுபிடிக்கப் பட்ட நாளிலிருந்து...
என் மகளின்
ஆதர்ஷ தோழி_ அந்த
"மரப்பாட்சியே"...!
என் அன்னை
எனக்கு வாங்கித் தந்தது
இன்று எனது மகளுக்கானது...!!

**- அனுராஜ்**
போடிநாயக்கனூர்.

## வேண்டும் ஓர் பிறவி

**பால தியாகராஜன், கோவை.**

தீரா அன்பால்
உனைக் கொஞ்ச
வேண்டும் ஓர் பிறவி..!

திவ்ய வதனம்
தினம் காண
வேண்டும் ஓர் பிறவி..!

இதழில் கசியும்
புன்னகை உணர
வேண்டும் ஓர் பிறவி..!

சங்கத் தமிழே
உன் சாரத்தில் மூழ்க
வேண்டும் ஓர் பிறவி..!

அள்ளியக் கூந்தலில்
முல்லையாய் மலர
வேண்டும் ஓர் பிறவி..!

செழிப்புடன் மிளிரும்
செவ்விதழ் இரசிக்க
வேண்டும் ஓர் பிறவி..!

அரைத்த சந்தன
நிறத்தைத் தீண்ட
வேண்டும் ஓர் பிறவி..!

சொப்பனம் யாவும்
நின் நிழல் உதிக்க
வேண்டும் ஓர் பிறவி..!

கற்பனை யாவும்
காணிக்கையாக்க
வேண்டும் ஓர் பிறவி..!

மெல்லிய பெயரை
சொல்லி இரசிக்க
வேண்டும் ஓர் பிறவி..!

கீதம் பொழியும்
சாரலில் நனைய
வேண்டும் ஓர் பிறவி..!

செல்லகோபத்தில்
என்றும் தோற்க
வேண்டும் ஓர் பிறவி..!

எப்பொழுதும்
உன் சிந்தனைத் துளிர
வேண்டும் ஓர் பிறவி..!

எப்பிறப்பிலும்
துணையே நீ வர
வேண்டும் பல பிறவி..!

## ஹைக்கூ

- குதிரை சவாரி
தொடர்ந்து வருகிறது
காலடித் தடம்..

- பறக்கும் பட்டம்
கீழே விழுகிறது
அறுபட்ட வால்...

- ஊதிய பலூன்
பெரிதாக விரிகிறது
சிறுமியின் கண்...

- காற்றடைத்த பலூன்
மேலே சுற்றித் திரிகிறது
சிறுமியின் பார்வை...

- கடற்கரை முழுவதும்
நிறைந்து இருக்கின்றன
காலடித் தடங்கள்...

**சீனு செந்தில்**
காட்டுமன்னார்கோயில்.

## கருத்தவளே...

உள்ளத்தின் அன்புதனை
உதடுகள்
மறைப்பதென்ன...

உதடுகள் சொல்லிய
சொல்லில்
உருவங்கள்
அழிந்ததென்ன...

உருவங்கள் அழிந்த
பின்னும்
உன் நினைவு காற்றிலாட...
காற்று வந்து கதை
சொல்லும்
கருத்தவளே உன் அழகை ...
உன் அழகை நான் வடிக்க
ஒரு வரி போதலையம்மா...

**- சு.தமிழ் வாணன்**

## திகில்தேசம்

வெறிச்சோடிய வீதியில்
சுருட்டி வைக்கப்படாத வெறுமைகள்
நிசப்தத்தில் விழுந்த
குண்டூசியின் கீறல்களின் இரத்தம்
யாருமற்ற பிரதேசத்தில்
கழற்றப்படாத முகமூடிகள்
காற்றில் குரூரமுகம்காட்டி
உலாவரும் பூதங்கள்
ஆழிப்பேரலையாய் அச்சம்காட்டும்
புரளிகள்
எல்லோரிடமும்
திகிலை நிரப்பிய எதிர்கால கனவுகள்
வெகுநாட்களாய் துருபிடித்த
கவிதையொன்று அப்படியேத்தான் இருக்கிறது
அழகு குறையாமல்
ரசிப்பதற்குத்தான் யாரிடமும்
மனம் இல்லை

**- தஞ்சைத்தரணியன்**



## கறுப்பு நாட்களின் இருட்டில்

**வேலணையூர் ரஜிந்தன்**

மேக மூட்டம் கொள்ளாத
பின் மதியப் பொழுதொன்றில்
வெம்மையின் கோரத்தில்
சருகாகிக் கொண்டிருக்கும்
சில இளந் தளிர்களைப் போலவும்

கால் தவறிப்போன தொரு
கானகத்தில் திசை தொலைத்து
நம்பிக்கை இறுதி நாட்களில்
உருகிக் கொண்டிருக்கும் சில
வழிப்போக்கர்களைப் போலவும்

முயற்சிகள் பயனற்றுப் போன
கொந்தளிக்கும் பெருங்கடலின்
காற்றோடும் அலை வீச்சோடும்
தத்தளிக்கும் பயணப் படகு போலவும்

காலத்தின் ஏட்டில் நிகழ்ந்திருக்கும்
இலக்கண வழுவாகவும்
கிருமியாலும் வறுமையாலும்
சபிக்கப் பட்ட பெரும் பாவமாகவும்

இக் கறுப்பு நாட்களின் இருட்டில்
ஒவ்வொரு ஊரிலும் ஏழைகள்
நம்பிக்கை வற்றிய வெறுமையோடு
உயிர்பிடித்துக் காத்திருக்கிறார்கள்
வாழ்தலெனும் பெரும் தவத்திற்காக!

## இரவுகளைத் தொலைத்தல்!

**வீ.ர. சுஜித்ரா, செஞ்சி.**



தினம் தினம்
ஏதோ ஒன்றுக்காக
இரவைத் தொலைக்க
வேண்டியதுள்ளது...

நடந்தவற்றை எழுத
புத்தகம் வாசிக்க என
ஏதோ ஒரு காரணம்
தினமும்
இரவைத் தொலைத்துவிட
காரணம் கிடைக்கிறது...

எப்போதும் மெனகெட்டுத்தான்
இரவைத் தொலைக்கிறேன்...

பல நேரம் சிலரின்
மகிழ்ச்சிக்காக தொலைத்த
நினைவுகள் உண்டு...

சிலவற்றைத் தொலைப்பதுமாய்
சிலவற்றை தேடுவதுமாய்
அந்த இரவுகள் விழிக்கின்ற
அனுதினமும்...

அந்த இரவுகள் ஒருமுறைக்கூட
என் பிரகாசத்தைக்
கண்டதேயில்லை...

எண்ணில் அடங்கா மகிழ்ச்சிகளையும்
யாருக்கும் தெரியாத அழுகைகளையும்
அதே இரவுகள் தான் கண்டது...

இப்போதெல்லாம்
இவற்றுக்காக வேணும்
இரவைத் தொலைக்க வேண்டியதுள்ளது...

உண்மையில்,
தொலைத்துவிட்டு
தேட வைப்பது தான்
இந்த இரவைத் தொலைத்தல்!

# நல்ல மனம் வாழும்!

மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை சலீம்பாய்க்கு. விடிந்ததும் அலமாரியைத் திறந்தார். பணக்கட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து தனது தோள்பையில் அடுக்கினார்.

காஃபி எடுத்துக் கொண்டுவந்த மனைவி சபீரா, "மகள் கல்யாணத்துக்காக வச்சிருந்த பணம். கொரோனா வைரஸ் பிரச்சினையால் ஆறு மாசம் கழிச்சு கல்யாணத்தை தள்ளி வச்சிருக்கோம். பேங்கும் அடைச்சிருக்கு. இப்போ ஏன் அலமாரியில இருக்குற பணத்தை பையில வைக்கிறீங்க?" சற்று உரக்கவே கேட்டார்.

காஃபியை வாங்கிய சலீம்பாய், "சபீ, நாளையிலிருந்து எல்லாக் கடைகளையும் அடைச்சிரணுமாம். நம்ம கடையை சுற்றிலும் வண்டியில் காய், பழம் விக்கிறவங்க, நடை பாதை வியாபாரிங்க, கூடையில் கீரை விக்கிற பொம்பளப் பிள்ளைகள், செருப்புத் தக்கிற வயசானவங்க,கூலித்தொழிலாளிங்கஅப்படினு நெறைய பேர் இருக்காங்க. இவங்கள்லாம் தினம் வேலை செஞ்சு அந்த வருமானத்த வச்சுதான் சாப்பாடு, வீட்டு வாடகை மத்த செலவெல்லாம் செய்வாங்க. முன்னறிவிப்பு ஏதுமில்லாம கொரோனா தொற்று வரக் கூடாதுனு கடையை மூட சொல்லிட்டு வீட்டுக்குள்ளேயே இருக்கணும்னா என்ன செய்வாங்க? கைக் குழந்தைகளோட நெறைய தாய்மார்கள் கெழங்கு, மீன் எல்லாம் விக்கிறத பாத்துருக்கேன். இதையெல்லாம் நெனச்சு ராத்திரி தூக்கமேயில்லை. அவங்களுக்கு நம்மால முடிஞ்சத செய்யணும். சாப்பாட்டுக்குத் தேவைப்பட்ற சாமான்களை மட்டும் இந்தப் பணத்துல வாங்கிக் கொடுத்துட்டு வந்துட்றேன். மக கல்யாணத்துக்கு நிச்சயம் ஏதாவது ஒரு வழி பிறக்கும்" காஃபி கிளாசை சபீராவிடம் கொடுத்துவிட்டு சாமான்கள் வாங்க பணத்தை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டார்.

பதிலேதும் சொல்லமுடியாமல் வாயடைத்துப் போய் நின்ற சபீராவின் மனதிற்குள் மகளின் கல்யாணத்துக்கு பணம் வேணுமே, என்ன செய்யப் போறோம், எப்படி நடத்தப்போறோம், மாப்பிள்ளை வீட்டுக் காரங்க என்ன சொல்லப் போறாங்களோ இப்படி அடுக்கடுக்கான கேள்விகள், கவலைகள். ஒன்றுமே செய்யப் பிடிக்காமல் சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்து விட்டார்.

செல்போன் சத்தம் கேட்டு மெதுவா எழுந்துபோய் எடுத்தால், அதில் மாப்பிள்ளையின் அம்மா பெயரைப் பார்த்ததும் மயக்கமே வந்துவிட்டது சபீராவுக்கு. பேசாமலிருந்தால் நல்லாயிருக்காதே, ஆண்டவா இதென்ன சோதனை? ஆன் செய்து காதில் வைத்தவுடன், "சபீரா ஒரு முக்கியமான சேதி, கல்யாணத்துக்கு நீங்க ஒரு செலவும் செய்ய வேணாம். எல்லாம் நாங்க பாத்துக்கறோம். பொண்ணுக்கு நகைகள், துணிமணி உள்பட எல்லாமே எங்க பொறுப்புதான். கொரோனா தொற்று சீக்கிரமா போகட்டும். ரொம்ப சிம்பிளா கல்யாணத்த நடத்திருவோம். நம்ம வழிப்படி மாப்பிள்ளை வீட்டில இருந்துதான் எல்லாமே செய்யணும். அதுதான் சிறப்பு. வேறென்ன சேதி?" என்றவரிடம், நல்ல சேதிய நீங்கதான் சொல்லியிருக்கீங்க, ரொம்ப சந்தோஷம். அவங்க வந்தவுடனே சொல்லிட்றேன். செல்போனை வைத்துவிட்டு கணவரின் வருகைக்காக காத்திருந்தார் சபீரா.

இவ்வளவு சீக்கிரம் மகள் கல்யாணத்துக்கு நல்ல வழி காண்பித்த இறைவனுக்கு நன்றிகள் கூறிக் கொண்டு, கொரோனா வைரஸ் விலகிட பிரார்த்தித்துக் கொண்டு, நல்ல மனம் என்றென்றும் நன்றாகவே வாழும் என்ற உண்மையையும் கணவர் உருவத்தில் உணர்ந்தார். கவலைகள் விலகி மனதில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது சபீராவுக்கு. ■

**ஃபாத்திமா**
ஷார்ஜா.



படைப்பாளர், இலக்கியச் செயற்பாட்டாளர்

**வெலிகம ரிம்ஸா முஹம்மத்** அவர்களுடனான நேர்காணல்

நேர்கண்டவர் : **வஃபீரா ரஸ்ஸாக்**

# தமிழுலகப் பூங்காவனம்

**தமிழ்நெஞ்சம் இதழுக்கான, நேர்காணலில் எம்மோடு இணைந்திருப்பவர் ஒரு எழுத்தாளர். சமூக ஆர்வலர், விமர்சகர் மற்றும் ஊடகவியலாளர் எனப் பல பரிமாணங்களில் மிளிரும், இலங்கையிலிருந்து வெளிவரும் பூங்காவனம் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் வெலிகம ரிம்ஸா முஹம்மத்.**

உங்களைப் பற்றிய அறிமுகத்தைக் கூறுங்கள்?

பாய்ந்தோடும் இயற்கை எழிலாய் நில்வளா கங்கையும் நீலவானின் நிறத்தை யொத்த அழகிய கடலும் கொண்டமைந்த இலங்கையின் தென் மாகாணத்திலுள்ள வெலிகமையே எனது பிறப்பிடமாகும். இந்த ஊரின் நாமத்தை எனது பெயரோடு இணைத்து, வெலிகம ரிம்ஸா முஹம்மத் என்ற பெயரில் எழுதி வருகின்றேன்.

2004 ஆம் ஆண்டு தினமுரசுப் பத்திரிகையில் நிர்மூலம் என்ற கவிதையை எழுதியதைத் தொடர்ந்து 16 ஆண்டுகளாக எழுதி வருகின்றேன். இதுவரை 13 நூல்களை வெளியிட்டுள்ளேன். இவை கணக்கீடு, கவிதை, நூல் விமர்சனம், சிறுவர் கதைகள், சிறுவர் பாடல்கள், ஆய்வு ஆகிய வகைகளிலான நூல்களாகும்.

அகம் சார்ந்தவை, பெண்ணியம், நட்பு, சமூக அவலம், சீதனக்கொடுமை, போர்ச்சூழல், போரின் அவலங்கள், நாட்டு நடப்புகள், உலக நடப்புகள், உறவுகளின் விரிசல், தனிமனித வாழ்வு, சமூக அக்கறை, மானிட நேயம், இயற்கை யின் வனப்பு, இயற்கை அனர்த்தங்கள், போதையின் அவலம், வறுமைப்புயல், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஜீவகாருண்யம்,ஆன்மீகம்போன்றவற்றைப் பாடுபொருள்களாகக் கொண்டே எனது படைப்புக்கள் அமைந்துள்ளன.

இலக்கியத் துறையில், உங்களுக்கு ஈடுபாடு எப்படி ஏற்பட்டது? அந்த முதல் அனுபவத்தைப் பற்றி...?

வாசிப்பு அனுபவம்தான் என்னை ஒரு எழுத்தாளராக உருவாக்கியது. நான் பத்திரிகை உலகத்தையோ அல்லது எழுத்துத் துறையையோ அறிந்திருக்க வில்லை. எதுவும் தெரியாமல்தான் வாசிக்க ஆரம்பித்தேன்.

நான் வாசிக்க ஆரம்பித்த காலங் களில் எமது உறவினரான மாமா ஒருவர் அந்தக் காலத்தில் ஒரு பிரபல்யமான எழுத்தாளராக இருந்தார். அவரது பெயர் எஸ்.ஐ.எம். ஹம்ஸா என்பதாகும். அக் காலத்தில் அவர் திக்குவல்லை ஹம்ஸா என்ற பெயரில் தனது படைப்புக்களை பத்திரிகைகளில் களப்படுத்தி வந்தார். இந்த மாமாவே தனது சிறுகதைகளை எனக்கும் வாசித்துக் காட்டி, என்னை இத்துறையில் ஈடுபாடு காட்ட ஒரு அடிக்கல்லை நாட்டினார். நிச்சயமாக இந்த மாமா இன்று உயிரோடு இருந்தால் என்னைப் பார்த்து மிகவும் சந்தோசப்படுவார். அவரின் இழப்பு இன்றும் எனக்கு ஆ(மா)றாத வடுவாகவே உள்ளத்தில் பதிந்துள்ளது.

2004 ஆம் ஆண்டில் திக்குவல்லை ஸப்வான் என்ற ஆசிரியரே முதன் முதலில் என்னைப் பற்றிய அறிமுகத்தை தினகரனின் இணைப்பிதழானசெந்தூரத்தில்இடம்பெறச் செய்து, என்னை ஊக்கப்படுத்தினார்.

### பூங்காவனம் சஞ்சிகை தொடங்க உந்துதலாய் அமைந்த விடயம் எது?

மல்லிகை, ஞானம் போன்ற சஞ்சிகை கள் அந்நாட்களில் மிகவும் பிரபல்யம் பெற்றவையாக இருந்தது. ஞானம் சஞ்சிகை எனக்கு அறிமுகமான புதிதில் மாதா, மாதம் ஒரு எழுத்தாளரை அறிமுகப்படுத்தி, அவரது கவிதையையும் பிரசுரித்து வந்தது. அதில் எனது அறிமுகமும் எனது கவிதையும்








பிரசுரமாகியது. அந்த மகிழ்ச்சியை இன்றும் அளவிட்டுச் சொல்ல முடியாது. எனக்குக் கிடைத்த மகிழ்ச்சியை எனது எழுத்தாள நண்பர்களுக்கும் வழங்கினேன். அதாவது அவர்கள் பற்றிய அறிமுகத்தையும், அவர்களது கவிதையையும் பிரசுரமாக நான் உதவியாக இருந்தேன்.

2004 ஆம் ஆண்டு தினமுரசுப் பத்திரிகையில் நிர்மூலம் என்ற எனது கவிதை பிரசுரமானதைத் தொடர்ந்து எழுத்துத் துறையில் 16 வருடங்களைக் கடந்து நின்றாலும் ஆரம்பத்தில் எனக்குக் கிடைத்த களங்கள் மிகவும் பெறுமதியானவை. அவையே என்னை ஊக்குவித்தன.

என்றாலும் புதிய எழுத்தாளர்களுக்கு வாய்ப்புக் குறைவாக அமைந்ததைக் காணமுடிந்தது. அதன் விளைவால் 2010 ஆம் வருடம் பூங்காவனம் என்ற சஞ்சிகையைத் தொடங்கி அதில் மூத்த எழுத்தாளர்களின் படைப்புக்களையும் உள்வாங்கி, கூடுதலாகப் புதிய எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தேன்.

**நீங்கள் இதுவரை எழுதிய நூல்கள் எவை? அவை, மக்கள் மத்தியில் எந்தளவுவரவேற்பைப் பெற்றுள்ளன?**

தென்றலின் வேகம் (2010), எரிந்த சிறகுகள் (2015) என்ற இரண்டு கவிதை நூல்களை நான் வெளியிட்டுள்ளேன். அவை இளசுகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளன. அவர்கள் ஒத்த மன நிலையில் கவிதைகளை வாசித்ததாகவும், ஒரே மூச்சாக புத்தகம் முழுவதையும் வாசித்து முடித்ததாகவும் கூறியதைக் கேட்டு மன நிறைவு கொண்டேன்.

கவிதைகளுடனான கை குலுக்கல் ஒரு பார்வை (2013) மற்றும் அறுவடைகள் (2015) என்ற இரண்டு நூல் விமர்சனங்கள் அடங்கிய நூல்களை நான் வெளியிட்டுள்ளேன். இந்த இரண்டு நூல்களைப் பற்றிச் சொல்லும் போது மூத்த எழுத்தாளர்கள் பலர் தங்களது நூல்களுக்கு, நானே நூல் விமர்சனம் எழுத வேண்டும் என்று விரும்பி, என்னிடமே அவர்களது நூல்களைத் தருகின்றார்கள். கிட்டத்தட்ட நான் இன்றுவரை எழுதிய நூல் விமர்சனங்கள் சுமார் 150 போல் இருக்கும். மூத்த எழுத்தாளர்கள் தொடக்கம் இளம் எழுத்தாளர்கள் வரை பாகுபாடின்றி நூல் விமர்சனங்களை எழுதியுள்ளேன். இத்துறையில் ஈடுபாடு காட்ட விரும்புபவர்கள் எனது நூல்களை



வாசிப்பதன் மூலம் பல எழுத்தாளர்களது நூல்களை வாசித்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சிறுவர் இலக்கிய நூல்கள் பற்றிச் சொல்லும் போது எனது நான்கு சிறுவர் கதைகளடங்கிய நூல்களை ரூம் டு ரீட் நிறுவனம் பிரசுரித்து வெளியீடு செய்துள்ளது. அவை ஆடம்பரக் கூடு (2012), என்ன கொடுப்போம்? (2012), பாடல் கேட்ட குமார் (2013), இதுதான் சரியான வழி (2013) ஆகியனவாகும். கூடுதலாக இலங்கையின் நாலா புறங்களிலும் உள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகள் சகலதிலும் எனது இந்த நூல்கள் மாணவர்களது வாசிப்புக்காக வைக்கப்பட்டுள்ளன. அது போல எனது சிறுவர் பாடல் நூலான வண்ணாத்திப் பூச்சி (2014) என்ற நூலை வெளியீடு செய்ய இலங்கை நூலக ஆவணவாக்கல் சபை அனுசரணை வழங்கியது. இந்த நூலை இலங்கைக் கல்வி அமைச்சின், நூல் அபிவிருத்தி சபையானது பாடசாலைகளுக்குப் பொருத்தமான நூலாக அங்கீகரித்துள்ளது.

விடியல் (2017) என்ற ஆய்வு நூலானது கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நான் இதழியல் கற்கும் போது சமர்ப்பித்த ஆய்வாக அமைகிறது. இந்த நூலைப் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் என்னிடம் கேட்டு பார்வையிடுகின்றார்கள். ஒரு ஆய்வு நூல் எப்படியிருக்க வேண்டும் என்ற அறிமுகத்தை இந்த நூல் மூலம் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

எனவே எந்த வகையான நூலாக இருந்தாலும் அவை பலருக்கும் பல வகைகளில் மிகுந்த பிரயோசனம் உடையதாக அமைய வேண்டும். இப்படியான நூல்கள் தான் காலத்தின் தேவையாக உள்ளது என்று நினைக்கின்றேன்.

> இலக்கியம், பத்திரிகை தவிர, மற்ற துறைகளில் உங்களுக்கிருக்கும் ஆர்வம் பற்றி..?

# அன்னைத் தமிழ்

**ஜென்ஸி**

கடவுள்கள் உன் முன்னே
எம்மாத்திரம் - அம்மா
அன்பிலே நீ தானே
அட்சயபாத்திரம்..!!

▲▲

பழைய. சோற்றை
பஞ்சாமிர்த. மாக்கும் பக்குவம்
அம்மா...உன் கைகளுக்கு
எப்படித் தான் வாய்த்ததோ...?

▲▲

அப்பனின் பாரம்
சடுதியில் முடிவது.
அன்னையின் பாசம்
ஆயுள் வரை தொடர்வது.

▲▲

எட்டி உதைத்தவன்
இன்னும் நிறுத்தவில்லை.
கட்டிக் காத்தவள்
காப்பகத்தி லிருக்கிறாள்.

▲▲

இன்னும் ஒரு முறை
என் தாயின் மணிவயிற்றில்
பிள்ளையாய் வாழ்வதற்கு
வழியுண்டோ... பகவானே..?

▲▲

வானகமும் வையகமும்
அன்னையர்க்கு மண்டியிடும் - அன்பு
மோன. தவம் செய்யும்
பேரின்ப. நந்தவனம்..!!

▲▲

பிள்ளைகள் பசியாறும்
வடிவழகைப் பார்த்திருப்பாள்.
அவளுக்கு அது போதும்.
தன் பசியை மறந்திருப்பாள்.

▲▲

வேதங்கள் நான்கு
என்பதெல்லாம் பொய்.
அம்மாவின் வார்த்தையுடன்
ஐந்தென்பதே மெய்.

▲▲

அம்மாவை அழைக்கும்
"அ"கரத்தில் தொடங்குவதால்
இம்மா நிலத்தே
இறவாப் புகழுடன்...தமிழ்..!!!

▲▲



கணக்கீட்டுத் துறையில் உயர் தரம் கற்றதால் கணக்கீட்டுத் துறையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. இந்த ஈடுபாட்டின் காரணமாக பாடசாலை மாணவர்களை நோக்கியதாக கணக்கீட்டுத் துறையில் மூன்று நூல்களை என்னால் வெளியிட முடிந்தது. இந்த நூல்கள் அந்தப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளன. அத்துடன் இப்போதைய கொரோனாக் கால ஓய்வு நாட்களில் அடிப்படைக் கணக்கீடு என்ற புதிய நூலொன்றையும் தயார்செய்துக் கொண்டிருக்கின்றேன். நிச்சயமாக இந்த நூலும் கணக்கீடு பாடம் கற்கும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில்எந்தவித ஐயமும் இல்லை.

**உங்கள் வாழ்க்கையில் ரோல் மாடலாக நினைப்பது யாரை?**

அவ்வாறு குறிப்பாக சொல்வதற்கு யாருமில்லை. ஒவ்வொரு விடயங்களிலும் பலதரப்பட்டவர்களை முன்னுதாரணமாகக் கொள்கின்றேன் அவ்வளவே. புதுக் கவிதைகளைப் பொறுத்தவரை கவிஞர் மு. மேத்தா அவர்களின் கவிதைப் பாணி எனக்கு மிகவும் பிடிக்கும். நூல் விமர்சனங்களைப் பொறுத்தவரையில் கே.எஸ். சிவகுமாரன் அவர்களின் திறனாய்வுப் போக்கு மிகவும் பிடிக்கும். இப்படி சில துறைகளில் சிலரை முன்னுதாரணமாகக் கொள்கிறேன்.

**இன்றைய பெண்கள் சமுதாயம் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினை எது? உங்கள் பார்வையில் அதற்கான தீர்வு என்னவென நினைக்கிறீர்கள்?**

தற்காலத்தைப் பொறுத்தவரை பொது வெளியில் பேசக் கூடிய அல்லது பேச வேண்டிய ஒரு விடயமாக பெண்கள், குழந்தைகளின் பாது காப்பு முக்கிய இடம் பெறுகிறது. குறிப்பாக தொழிலுக்குச் செல்லும் பெண்கள் பஸ்களிலும், அலுவலகத்திலும் மட்டமான சில ஆண்களின் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. பலர் எதிர்த்தும் சிலர் வெளியே சொல்ல முடியாமல் கண்ணீரோடும் வாழ்கிறார்கள். குழந்தைகளைப் பொறுத்தளவில் சொந்த பந்தத்திலுள்ள சில ஆண்கள், சில ஸ்கூல் சர்விஸ் சாரதிகள், சில ஆண் ஆசிரியர்கள் போன்றவர்களின் தகாத தொடுகைகளுக்கு உள்ளாகி சில குழந்தைகள் பெற்றோரிடம் சொல்லப் பயந்து ஒரு வகையான மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள்.

எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண்கள் தைரியமாக தம் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அலுவலகங்களில் தம் சக பெண் ஊழியர்களிடம் தமக்கு நடந்த அநீதியைத் தெரிவித்து அவர்களையும் பாதுகாக்க வேண்டும். அத்துடன் பெண் மேலதிகாரிகளிடமும் இதுபற்றி முறையிட வேண்டும். குழந்தைகளுக்கு 'குட் டச்', 'பேட் டச்' சொல்லிக்கொடுப்பதைவிட 'டோன்ட் டச்' என்று சொல்லிக் கொடுங்கள். பெண்

பிள்ளைகள் ஆண் நண்பர்களுடன் பழகுவதை பெற்றோர்கள் கண்டிப்பாக அவதானியுங்கள். மிக முக்கியமாக ஸ்மார்ட் போன்களை பிள்ளைகளுக்கு கொடுக்காதீர்கள். அதே போன்று தற்காலத்தைப் பொறுத்தவரை பெண் பிள்ளைகளுக்குப் போன்றே ஆண் பிள்ளைகளின் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.

**இலங்கையில் எழுத்துச் சுதந்திரம் திருப்திப்படக்கூடிய அளவில் உள்ளதா?**

எழுத்துச் சுதந்திரம் என்பது உலகளவில் நோக்கினாலும் நூற்றுக்கு நூறு வீதம் இல்லை என்றே கூற வேண்டும். அரசியல், இலஞ்சம், ஊழல், மோசடி போன்ற எதுபற்றிக் கூறினாலும் அவற்றை மேலோட்டமாக விமர்சிக்க முடியுமே தவிர, ஆழமான கருத்துக்களை பதிவிடுவது உயிர் அச்சுறுத்தலுக்கே வழிவகுக்கும் நிலமை காணப்படுகின்றது. இதில் இலங்கை மட்டும் விதிவிலக்கு அல்லவே. இந்தக் கேள்விக்கான விடையை இதற்கு மேலும் விரிவாகச் சொன்னால் அதுவே ஒரு பிரச்சினையாகவும் மாறிவிடக் கூடும்.

**நூற்றுக் கணக்கானவர்களை நீங்கள் பத்திரிகை, சஞ்சிகை, இணையத் தளங்கள் வாயிலாக நேர்காணல் செய்துள்ளீர்கள். உங்களது அறிமுகம் மற்றும்நேர்காணல்கள்ஊடகங்களில் வெளிவந்தது தொடர்பாகப் பகிர்ந்து கொள்ளலாமே?**

திக்குவல்லை ஸப்வான் என்ற ஆசிரியரே முதன் முதலாக என்னைப் பற்றிய அறிமுகத்தை தினகரனின் இணைப்பிதழான செந்தூரத்தில் (2004.07.04) இடம் பெறச் செய்து என்னை ஊக்கப்படுத்தினார். அதைத் தொடர்ந்து இன்றுவரை 20 க்கும் மேற்பட்ட நேர்காணல்கள் இதழ், வானொலி, தொலைக்காட்சியாக வந்துள்ளது.

ஊவா சமூக வானொலியில் நெஞ்சம் மறப்பதில்லை நிகழ்ச்சியில் எனது நேர்காணல் ஒலிபரப்பப்பட்டுள்ளன. சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் ஒலிபரப்பான இந்த நேர்காணலை பாத்திமா ரிஸ்வானா செய்தார். இந்த நேர்காணல் மூலமே எனக்குத் தாராளமாகக் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள அவகாசம் கிடைத்தது.

**இலக்கியத் துறையில் உங்களால் மறக்க முடியாத சம்பவம்?**

விருது வழங்கும் ஒரு தனியார் அமைப்பு,பத்திரிகைகளில்ஆய்வுநூல்மற்றும் மொழி பெயர்ப்பு நூல் போன்றவற்றுக்கு விருது கொடுப்பதாக தகவல் தந்து, நூல்களை அனுப்பி வைக்கும்படி கோரியிருந்தார்கள். அதற்கிணங்க நானும் எனது நூலையும் குறிப்பிட்ட அமைப்புக்கு நேரில் கொண்டு போய்க் கொடுத்தேன். சில நாட்களில் தொடர்பாளர் எனக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி ஒரு இலக்கிய நிகழ்வைக் குறிப்பிட்டு அதற்கு வருமாறும், நிகழ்வு முடிந்த பின்விடியல் நூல் பற்றிக் கதைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அதன்படி நானும் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றிருந்தேன்.

தொடர்பாளர் என்னை ஒரு தனிப்பட்ட ரீதியாக நேர்காணல் செய்தார். இந்த நேர்காணலில் முழுக்க, முழுக்க






எனது வருமானம், குடும்பப் பொருளாதார நிலைமை, ஆண் சகோதரர்களின் தொழில், அதிலும் வெளிநாட்டில் யாராவது உறவுகள் வசிக்கின்றார்களா போன்ற கேள்விகள் முக்கிய பேசு பொருளாக அமைந்தன. அவர் எதிர்பார்த்த கேள்விகளில் அவருக்கு சாதகமாக எந்தப் பதிலும் அமையவில்லை.

நான் மிகவும் வறுமையான குடும்பத்திலிருந்து வந்தவள் எனும் உண்மையைச் சொன்னேன். அவரைப் பொறுத்தவரை அந்த நேர்காணலில் நான் தோல்வியடைந்தேன் என்று தான் சொல்ல வேண்டும். ஆகக் குறைந்தது அவரது பெயரை எனது விடியல் நூலில் குறிப்பிடவில்லை என்றும் கடிந்துகொண்டார்.

என்ன ஆச்சரியம் எனது விடியல் நூல் தேர்வுக் குழுவுக்கே போகவில்லை. இதுபற்றி மிகவும் உறுதியாகத் தெரிந்து கொண்ட நான், அவரிடம் எனது நூல் தொடர்பாக வினவினேன். அவர் மிகவும் காரசாரமாகப் பேசினார். உங்கள் நூலை தேர்வுக் குழுவுக்குப் அனுப்புவோம் அல்லது அனுப்பாமல் விடுவோம். அதனை முடிவு செய்வது நாங்கள். மட்டுமல்லாமல் நாங்கள் நினைத்தவர்களுக்குத்தான் விருதும் கொடுப்போம் என்றும் குறிப்பிட்டார். இதனை ஒரு கேள்வியாக கேட்டுக் கொண்டு நீங்கள் வருவதுதான் சரியில்லை என்று கடுமையாகக் குறிப்பிட்டார்.

விரும்பியவர்களுக்கு விருதுகளைக் கொடுக்கட்டும். எதற்காக உலகத்தை ஏமாற்ற வேண்டும்? பின்னர் இந்த எனது பிரச்சினையை நான் அமைப்பின் தலைவருக்கு தெரியப்படுத்தினேன். அமைப்பின் தலைவரும், தொடர்பாளர் பேசியது போலவே என் கார், என் பெற்றோல், என் இஷ்டம் என்ற அதிகாரத் தோரணையில்தான் பேசினார்.

சத்தியமாக எனக்கு விருது கிடைக்கவில்லை என்பது எனது கவலையல்ல. எனது நூல் தேர்வுக் குழுவுக்குப் போய் விருது கிடைக்காமல் இருந்தால் அது நியாயமானதே. அந்த நூல்களைத் தேர்ந்தெடுக்கும் நடுவர்கள் ஒருவரும் எனது நூலைக் கண்ணாலும் காணவில்லை என்பதுதான் எனக்கு வருத்தம். இப்படியான ஒரு போலிக் கும்பலுக்கு எனது நூலைக் கொடுத்தேன் என்று நினைக்கையில்தான் கவலையாக இருக்கிறது.

நூல் தரமாக இல்லாவிட்டாலும் அவர்களுக்கு குறிப்பிட்ட நபரை ஏதோ ஒரு (பொருளாதார) காரணத்துக்காக பிடித்திருந்தால் விருது கொடுப்பார்கள். இப்படி விருதுகள் பற்றி பலரும் பலதையும் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் இந்த அனுபவம் எனக்குக் கிடைத்த ஒரு புதுமையான அனுபவம். இந்த நிகழ்வை என்னால் இன்றும் மறக்கமுடியவில்லை.

இப்படித்தான் 2018 இல் முக நூல் நுட்(அற்)பமான குழுமமொன்று விழாவமைத்து எனக்கு ''கலைப்பொழில்'' நுட்ப விருது தருவதாக அறிவித்து மூன்று மாதம் பதிவுகள் போட்டு அமர்க்களப்












படுத்தினார்கள். இவர்களை நம்பியும் பலர் வெளிநாட்டிலிருந்தெல்லாம் வந்திருந்தார்கள். அவர்களிடம் நன்கொடையென சொல்லி பணம் பறித்திருக்கிறார்கள். விருது தயாரிப்பில் தாமதமாகி விட்டதென்று சொல்லி சமாளித்தி ருக்கிறார்கள். பெரும் செலவு செய்து வந்தவர் கள் வேதனைப்பட்டதை நான் அறிவேன். எனக்கும் இதுவரை அந்த குழுவினர் எனக்கு எந்த விதமான விருதுகளையும் அனுப்பி வைக்கவில்லை. இப்படியான அமைப்புகள் பணத்தை மட்டுமே நோக்க மாகக் கொண்டு செயல்படுவதைதிருத்திக்கொள்ள வேண்டும்.



நீங்கள் இதுவரை சாதித்ததும், சாதிக்க நினைப்பதும்?

2010 ல் பூங்காவனம் இலக்கிய வட்டத்தை நிறுவி, அதன் மூலம் இதுவரை 37 பூங்காவனம் காலாண்டு சஞ்சிகைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டிருப்பதைப் பெரும் சாதனையாகவே நினைக்கின்றேன். ஏன் என்றால் ஒரு பெண்ணாக இருந்து கொண்டு விளம்பரங்களைத் தேடுவதிலுள்ள சிக்கல், ஆக்கங்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் தட்டச்சு செய்வது, அச்சகங்களின் தாமதம் போன்றவற்றைத் தாண்டி குறிப்பிட்ட காலத்துக்குள் சஞ்சிகையை வெளியிடுவது ஒன்றும் அவ்வளவு இலேசான காரியமல்ல. எனவே அதை நான் சீராக வெளியிட்டு வருவதே ஒரு சாதனை என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

ஒரே துறையில் அல்லாது கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், ஆய்வு போன்ற பல தளங்களிலும் இலக்கியம் படைப்பதோடு மேலதிகமாக கணக்கீட்டுத் துறையையும் இணைத்து இதுவரை 13 நூல்களை வெளியிட்டிருப்பதும் என்னைப் பொறுத்த அளவில் ஒரு சாதனையாகவே நினைக்கிறேன்.

கணினி வடிவமைப்பும் முழுமையாக செய்த நிலையில் அச்சுக்குத் தயாராக இருக்கும் இன்னும் 5 நூல்களை எதிர்காலத்தில் ஒவ்வொன்றாக வெளியிட வேண்டும்.

ஊடகத் துறையிலும், இலக்கியத் துறையிலும் கால் பதிக்க ஆர்வத்துடன் காத்திருக்கும் பெண் களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

இலக்கியம் என்பது ஒரு அழ கான பூஞ்சோலை. அதிலே பலர் தேனெ டுத்துக் கொண்டிருப்பார்கள். சிலரோ அப்பூஞ்சோலையை அழிக்க வாளெடுத்துக் கொண்டிருப்பார்கள். இலக்கியத் துறையில் சாதிப்பதற்குபலர்எமக்குகைகொடுத்தாலும் சில நேரங்களில் வெட்டுக் கொத்துக்கள் நிறைய இடம் பெறும். முதலில் அவற்றை எதிர்கொள்ள தைரியம் வேண்டும். அவ்வாறானவர்களைக் கண்டு ஒதுங்கி விடாமல் தன் முயற்சியில் உறுதியாக நிற்க வேண்டும். சமூகத்திற்காக தான் சொல்ல வந்ததை துணிவோடும் உளத் தூய்மையோடும் படைப்பாக்கம் செய்வதில் உறுதியாக நின்று முன்னேற வேண்டும்.

**உங்கள் இலக்கியப் (இலட்சியப்) பயணத்தில், மேலும் சாதனைகளுடன் தடம் பதித்து வெற்றிவாகை சூட, தமிழ்நெஞ்சம் இதழ் சார்பாக எம் இனிய வாழ்த்துகளையும், நன்றிகளையும் கூறிக்கொள்கிறோம்.** ■

# இயற்கை அன்னை சிரிக்கின்றாள்!

இயற்கை அன்னை சிரிக்கின்றாள் !
- மீண்டும்
இயற்கை அன்னை சிரிக்கின்றாள்!
தன்னை
அழித்த அரக்கன் வீட்டுக்குள்
முடங்கிக் கிடப்பதை கண்டு
இயற்கை அன்னை சிரிக்கின்றாள் !

செடிகள் மீண்டும் நடனமாட ! - வீசும்
காற்றோ அதற்கு தாளம் போட! - மகிழ்ந்து
குயில்கள் கானம் பாட
இயற்கை அன்னை சிரிக்கின்றாள்

கடலோ நீலவண்ணம் பூச! -அதன்
அழகைக் கண்ட அலைகள்
ஆனந்த தாண்டவம் போட!
இயற்கை அன்னை சிரிக்கின்றாள்!

வானம் நித்தம் சிரிக்க! - அதில்
நட்சத்திரம் மீண்டும் ஜனிக்க! -அழகு
கவிதையாய் நிலவும் ஜொலிக்க!
இயற்கை அன்னை சிரிக்கின்றாள் !

மரங்கள் பூத்து குலுங்க! - பறவைகள்
பல மைல்கள் கடந்து இளைப்பாற! - மரமோ
பழங்கள் கொடுத்து உபசரிக்க !
இயற்கை அன்னை சிரிக்கின்றாள் !

கதிரவன் கோபம் தணிய! -அதனால்
இடியோ வெடியை வெடிக்க! - கோடை
மழையா மக்கள் வாயைப்பிளக்க
இயற்கை அன்னை சிரிக்கின்றாள்!

மரங்கள் அழித்த கட்டிடம்! -காற்றை
மாசுபடுத்திய வாகனம்! - இயற்கை
வளங்களை சிதைத்த மானுடம் ! -அனைத்தும்
இன்று சடமாய்க் கிடக்க
இயற்கை அன்னை சிரிக்கின்றாள்!

**- நிவேதிதா.**

# கைப்பேசி

எதோ
ஒரு குறுஞ்செய்தியில்
பரவசமானோம்..!

சில வார்த்தைகளில்
அறிமுகமானோம்..!

மன ஓட்டங்களில்
ஒருமுகமானோம்..!

பல தினங்களில்
காதலாகிப் போனோம்..!

இரு மனங்களில்
சொந்தமாகிப் போனோம்..!

பிற சொந்தங்களின்
சம்மதமாகிப் போனோம்..!

பெற்றோர் ஆசியுடன்
திருமணமாகிப் போனோம்..!

மங்கா வளம் பெற்ற
குடும்பமாகிப் போனோம்..!

மூன்றாம் மழலையை
பந்தமாக்கிப் போனோம்...
என்ற போதும்
எங்கள் எல்லோரையும்
ஒன்று சேர்த்து
எங்கள் தெய்வமாகிப்போனது
“கைப்பேசி”..!

அன்புடன்,
**மகிழை. சிவகார்த்தி,**
புறத்தாக்குடி.





# விதவை (கைம்பெண்)



இடுப்பிலே பிள்ளைப் பெண்ணின்
இளந்தனம் பற்ற; சோறோ
அடுப்பிலே பொங்கி டாமல்
அங்கரம் கிண்டிக் காக்க
விடுப்பிலா ஐம்பு லன்கள்
வீழ்ந்திடா திருக்க ஐயோ
தொடுக்கிறாள் உயிரைப் பூவாய்
தொடர்கிற துக்க நூலால்

பஞ்சணை ஒற்றை தூக்கம்
பாதியில் விழிக்கும் கண்கள்
மஞ்சளோ பொட்டோ தொட்டு
மறந்துமே நெற்றி வைத்தால்
அஞ்சியே துடைக்கும் இந்த
அவலமும் பழகிக் கொண்டே
நஞ்சுநேர் நினைவோ டெந்தன்
நாட்களும் போகு தெங்கோ

வேதனை தொலைந்து நாளை
வெறுப்பவர் சேர்வார் இந்த
மாதமும் கடந்து விட்டால்
மகிழ்மணம் ஆகும் என்று
தீதறு கட்டம் போட்டுத்
திசைகளை அறிந்து சொன்ன
சாதக ஏட்டைப் பார்த்தே
சரிகிறேன் நாளெல் லாமும்

கண்களோ சகுனம் பார்க்கும்
காரியம் தடைகள் ஆகும்
என்உரு எதிரே வந்தால்
ஏற்றமும் இறக்கம் கொள்ளும்
என்றெலாம் நினைப்பார் இங்கே
இருக்கிற வரையில் எந்தன்
புண்களும் ஆறா தப்பா
புலம்பலும் தீரா தப்பா

**ஏடி வரதராசன்**



# கனவு...



நனவெனும் வெளிச்சப்பறவை உறங்கும் கூடு
வண்ணத்துப்பூச்சியின் காத்திருப்பு காலம்
கட்டிமுடிக்க வேண்டிய கோபுரத்திற்காக
கொட்டி வைக்கப்பட்ட செங்கற்கள்.

கடலலை தாலாட்டும் மல்லையில்
கண்விழித்தது பல்லவனின் கலைக் கனவு
களிமண் பூமியில் காண்பவர் கண்களில்
காலக்கனவென விரிந்தது ராசராசன் கனவு.

உலகை ஓர் குடையின் கீழ் ஆள கனவு கண்ட
திலகமென திகழ்ந்த மகா அலெக்சாந்தர்/
நிலையான உண்மையை நிலைநிறுத்திச் சென்றான்
காதற்ற ஊசியும் வராது என்ற பட்டினத்தார் மெய்மையை.

மாடு மேய்த்த சிறுவன் ஏடு தூக்க
விழைந்தது கர்மவீரர் கனவு/
மணிமேகலை வள்ளலார் வரிசையில்
மக்கள் திலகத்தின் கனவு.

சரித்திர நாயகர்களின் கனவுகளுக்கு
சற்றும் சளைத்ததில்லை சாமான்யர்களின் கனவுகள்
சாலையோர வாசிகளுக்கு ஒழுகாத கூரை
சம்பளவாசிகளுக்கோ கூடாத விலைவாசி.

கழிப்பறையே கனவான நாட்டில்
கனவுகளுக்கான காலம் முடிந்திடுமா என்ன
காத்திருக்கிறது கலாமின் கனவு/
கனவுகளுக்கும் பஞ்சமில்லை அது கைகூடும்
எனும் நம்பிக்கைக்கும் பஞ்சமில்லை.

- சக்திஅருளானந்தம்,

# தமிழ்நெஞ்சம்

## மரபு

## கவிதைக் களஞ்சியம் 2021

1. பாலு கோவிந்த ராசன்
2. சரசுவதி பாஸ்கரன்
3. தென்றல் கவி
4. மஞ்சுளா ரமேஷ்
5. ஏ டி வரதராசன்
6. ஜோதிபாஸ் முனியப்பன்
7. தங்கைபாலாஆசினி
8. ஓசூர் மணிமேகலை
9. மன்னைமணிமாறன்
10. சித்தார்த்பாண்டியன்

இவர்களுடன்,

11. இராம வேல்முருகன்
12. தமிழ்நெஞ்சம் அமின்

ஆகியோர் இச்சிறப்பு மரபுக் கவிதைக்களஞ்சியத்தை சிறந்ததோர் ஆவணப் பணியாகச் செய்ய முனைந்துள்ளார்கள். கவியுறவுகளே... இப்பணியில் கரம்கோர்த்து நூலில் தங்களின் கவிதைகளையும் இடம்பெறச் செய்ய காலதாமதமின்றி யூனிகோட் எழுத்துருவில் அனுப்பி பயனடைய விழைகிறோம். ஆக்கங்களை பட உருவிலோ ஆகவோ அனுப்ப வேண்டாம். அனுப்பும் கவிதைகள் இதுவரை அச்சில் வராதவையாக இருத்தல் அவசியம். தங்கள் கவிதை, நூலில் இடம்பெற கட்டணமோ / பங்குத்தொகையோ கிடையாது.

தொடர்புகளுக்காக...
+91 8754643478 , +91 9952529619 , +91 04374265069

தங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய ஒரே மின்னஞ்சல்

marabu2021@tamilnenjam.com

# மரபு
# கவிதைக்களஞ்சியம் 2021

வணக்கம் கவியுறவுகளே

2021 மரபுக்கவிதைகளைத் தொகுத்து நூல் வெளியிடத் திட்டம் ஒன்று உருவாகியுள்ளது. இதில் பங்கு பெற தாங்கள் எத்தனை மரபுக்கவிதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம். தெரிவு செய்யப்படுபவை மட்டும் தொகுப்பில் வெளியிடப்படும். தலைப்பு தங்கள் விருப்பமே. கீழ்க்காணும் மரபு வகைகளில் தங்கள் கவிதை அமையலாம்.

**வெண்பா**

1. குறள் வெண்பா - 12
2. நேரிசை வெண்பா - 6
3. இன்னிசை வெண்பா - 6
4. நேரிசை பஃறொடை வெண்பா - 2 ( தலா 12 அடிகள் )
5. இன்னிசை பஃறொடை வெண்பா - 2 ( தலா 12 அடிகள் )
6. நேரிசை கலிவெண்பா 1 ( 24 அடிகள் )
7. இன்னிசை கலிவெண்பா 1 ( 24 அடிகள் )
8. குறள்வெண்செந்துறை 12

**ஆசிரியப்பா**

9. நேரிசை ஆசிரியப்பா 2 ( தலா 12 அடிகள் )
10. இணைக்குறள் ஆசிரியப்பா 4 ( தலா 6 அடிகள் )
11. நிலைமண்டில ஆசிரியப்பா 2 ( தலா 12 அடிகள் )
12. அடிமறி மண்டில ஆசிரியப்பா 2 ( தலா 12 அடிகள் )

**கலிப்பா**

13. தரவு கொச்சகக் கலிப்பா 24 அடிகளுக்குள்
14. தரவிணை கொச்சகக் கலிப்பா 24 அடிகளுக்குள்
15. நேரிசை ஒத்தாழிசைக் கொச்சகக் கலிப்பா 24 அடிகளுக்குள்
16. மயங்கிசை கொச்சகக் கலிப்பா 24 அடிகளுக்குள்
17. கட்டளை கலித்துறை - 6

**வஞ்சிப்பா**

18. வஞ்சிப்பா 8 அடிகளில் 3 மட்டும்

**விருத்தங்கள்**

| | |
|---|---|
| 19. அறுசீர் ( காய் காய் மா அரையடி) | 3 |
| 20. எழு சீர் (காய் காய் மா மா காய் மா மா) | 3 |
| 21. எண்சீர் ( காய் காய் மா தேமா அரையடி) | 3 |
| 22. வெளி விருத்தம் | 6 |
| 23. கலி விருத்தம் | 6 |
| 24. வஞ்சி விருத்தம் | 6 |

**மருட்பா**

| | |
|---|---|
| 25. புறநிலை வாழ்த்து மருட்பா 2 | ( 12அடிகள் ) |
| 26. கைக்கிளை மருட்பா 2 | ( 12 அடிகள் ) |
| 27. வாயுறை வாழ்த்து மருட்பா 2 | ( 12 அடிகள் ) |
| 28. செவியறிவுறூஉ மருட்பா 2 | ( 12 அடிகள் ) |

**இதர பாடல்கள்**

| | |
|---|---|
| 29. கும்மிச்சிந்து 2 | ( தலா 12 அடிகள் ) |
| 30. நொண்டிச்சிந்து 2 | ( தலா 12 அடிகள் ) |

அனைத்துப் பாக்களிலும் எதுகை மோனை கட்டாயமாக இருக்க வேண்டும். இயைபு இருப்பின் சிறப்பு. எழுத்துப்பிழை கொடுக்கப்பட்ட இலக்கணத்துக்கு ஒவ்வாத கட்டுப்படாத பாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தங்கள் கவிதைகள் எந்த பாவகையெனினும் 24 அடிகள் மட்டுமே இருக்க வேண்டும்.

பாவலர்கள் அனைத்து பாவகைகளிலும் கவிதைகள் அனுப்பலாம். தடை யில்லை. பங்கு பெறும் அனைத்து பாவலர்களும் நூல் வெளியீட்டு விழாவில் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்படுவர்.

தங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய ஒரே மின்னஞ்சல்

marabu2021@tamilnenjam.com

பொறுப்பாளர்கள் : **இராம வேல்முருகன்**
**தமிழ்நெஞ்சம் அமின்**

**ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நூலாக்கத்தில்**
**தாங்களும் பங்கு பெறுங்கள்.**

# மந்த புத்தி

- பாலமுனை பாறூக்

'பஸ் ஹோல்டின்' பக்கத்திலிருந்த சில்லறைக் கடை. பஸ்ஸுக்காகக் காத்து நின்றவனைக் கடைக்காரர் அறிமுகம் செய்தார்.

"ஒருகிழமைக்கு 16000/- ரூபாவை இவன் வங்கியில் சேர்க்கிறான் சேர்". கடைக்காரர் சொல்ல,

"ஓம்சேர் நல்ல தொழில்.." என்று ஏற்றுக் கொண்டான் கழுத்தோடு ஒட்டியிருந்த தலைலையை ஒரு பக்கமாமாகச் சாய்த்து எம்மை நோக்கி நடந்து வந்த அவன்.

அவனை அறிந்து கொள்ள விரும்பினேன்.

"இப்ப எங்க போக?" கேட்டேன்.

"கொழும்புக்கு சேர் ஐடின்ரி காட் எடுக்க. எலக்சனும் வருகுது. அது இருந்தாத்தான் "ஓட்டு»க்கு காசி வாங்கலாம். ஐடின்ரி இல்லாம தரமாட்டாங்களே சேர். நமக்கிட்டயும் மூணு ஓட்டு இருக்கு ஒரு பத்தாயிரத்த வாங்கலாம்.

"என்ன தொழில் பார்க்கிறீங்க."

"ஊருக்குள்ள போற சேர். எப்படியும் ஒருநாளைக்கு நாலாயிரம் மட்டுக்கு சேக்கலாம்.'என்னைய "மந்த புத்தி" என்பாங்க சேர். ஒரு தொழிலும் பாக்கேலா. சொல்றதும் அவ்வளவா விளங்கிறல்ல. இதில வருமானம் பிழ இல்ல சார். ஊடும் கட்டி, பாத் ரூமும் கட்டி முடிஞ்சிசேர். முதல் பொண்சாதிக்கு கொஞ்சம் சுகமில்ல. அதனால, போன கிழமதான் ஒரு அசலூருப் புள்ளய முடிச்சி அதையும் என்ர ஊட்டில கூட்டிவந்து வச்சிரிக்கன்."

பஸ் வந்தது. ஓடிச்சென்று பஸ்ஸில் ஏறிக்கொண்டான் 'மந்த புத்தி'.

■

## விவசாயின் புலம்பல்

வானம் பொழிய வில்லை
வயல் செழிக்க வில்லை
வறுமை விலக வில்லை
வளமை கிடைக்க வில்லை

கவலைத் தீர வில்லை
காட்சி மாற வில்லை
கண்ணீர் குறைய வில்லை
காலம் கனிய வில்லை

ஏழ்மை ஒழிய வில்லை
ஏக்கம் குறைய வில்லை
ஏற்றம் கிடைக்க வில்லை
எதுவும் புரிய வில்லை

இன்பம் கூட வில்லை
பொழுது விடிய வில்லை
இதயம் துடிக்க வில்லை
இதற்குத் தீர்வி ல்லை

கடவுள் இங்கி ல்லை
கருணை எங்குமி ல்லை
கடுஞ் சொல்பேச வில்லை
கனியும் கிட்ட வில்லை

எதுவும் எனக் கில்லை
ஏனென்றுப் புரிய வில்லை
என்விதி மாற வில்லை
எதற்கென்றுத் தெரிய வில்லை

மண்டியிடத் தெரிய வில்லை
மயக்கம் தெளிய வில்லை
மனதில் மகிழ்வி ல்லை
மரணமும் வர வில்லை.

**- நா. பாண்டியராஜா.**
ஆர்.எஸ்.மங்கலம்.

# ஹைக்கூ

பட்டம் விடும் போட்டி
தொடர்ந்து கொண்டிருக்கிறது
பால்யகால நட்பு.

உருகும் மெழுகு
குறைந்து கொண்டிருக்கிறது
வெளிச்சம்!

குழந்தையின் இரகசியம்
வேடிக்கையாக பேசப் படுகிறது
பெற்றோரின் சண்டை!

பூவின் மேல் துளிகள்
பிரகாசமாக இருக்கின்றன
சில நட்சத்திரங்கள்!

பறித்த ரோசா
மெல்ல எட்டிப் பார்க்கிறது
விரலில் இரத்தம்.!

பூத்த மலர்
பறித்ததும் சுருங்குகிறது
காவலாளி முகம் !

குத்திய தோடு
அடகு வைக்கப்படுகின்றது
மாமனின் பத்திரம் !.

வாகன நெரிசல்
நீண்டு கொண்டேயிருக்கின்றன
யாசகர்களின் கரங்கள்!

வறண்ட நதி
மண்ணில் வெகுதூரம் செல்கிறது
நீர்தேடும் வேர்கள்!

கரமேந்தும் யாசகனிடம்
கடன்காரனாக்குகிறது
காலியான சட்டைப்பை!

விளையாட்டில் தோல்வி
பெருமையை தேடித் தருகிறது
பிள்ளையின் அறிவு

விளையாடித் தோற்றதும்
பெருமையாக இருக்கிறது
பிள்ளையின் அறிவு!

என்னுடைய ராசியோ
விபத்தில் பலத்த அடி
குறுக்கே வந்த பூனைக்கு!

கடன்காரனின் வருகை
மறைத்து வைக்கப் படுகிறது
வாசலில் செருப்பு!

பூச்சியை பிடித்ததும்
மாறிக் கொண்டேயிருக்கிறது
குழந்தையின் முகம்..!

தாமாரை இலை
பெரிதாகக் தெரிகிறது
சூரிய ஒளி!

பூச்சிகளைத் துரத்த
பாதைகளில் தடுமாறுகிறது
பிஞ்சு பாதங்கள்!

தூளியில் குழந்தை
அமைதியாக இருக்கிறது
கால் கொலுசு

உறங்கும் குழந்தை
அடிக்கடி சிணுங்குகிறது
கால் கொலுசு!

நிலவைத் தேட
தொலைந்து போகிறது
குழந்தையின் பசி!

**- ஷர்ஜிலா ஃபேர்வீன்**



# ராணி சேல்விழியாள்..

- ரிஸ்வான்





மன்னர் நான்கு புறமும் வியூகம் அமைக்கப்பட்டு சூழப்பட்டுள்ளார் சுற்றிலும் யானை குதிரை தந்திரத்தில் குள்ள நரி படை சூழலில் வாளேந்தியும் செயலற்று நிற்கும் நிலை..தாயே..

போர்க்களத்திலிருந்து தகவல் கொண்டு வந்தான் தலைமை சேவகன்.

எண்திசைஎரித்திடும்எரிமலைபிழம்பாகசீறிஎழுகிறாள்ராணிசேல்விழியாள். அரிமா முன்னே..

ஆட்டு மந்தைகளா... வாள்விழி வீச்சும்.. வைரம் விளைந்த பேச்சும். நிரைந்த ராணிசேல்விழியாள் எண்திசை வணங்கி வழிவிட..குதிரையில் சீறிப்பாய்ந்து கையில் வாளேந்தி ... விழிகளில் வீரமேந்தி மின்னல் கீற்றென புறப்பட்டாள்.

செல்லும் வழியெல்லாம் வேரறுந்து வீழ்ந்து கிடந்தன மனித மரங்கள்.. தலையிழந்து.. கிளையிழந்து.. குருதி ஆற்றில் மிதந்து கிடந்தன.

உயிரின் துடுப்புகள் இல்லாத உடல் படகுகள்..மயான அமைதியில் போர்க்களம்.. மன்னன் பெருந்தேவனின் சிறப்பான போர் முறை...தென் பட்டது. எங்கு எதில் மன்னன் மதி இழந்தான்... நிச்சயம்.. இது நேர்மையான போர்க்களம் அல்ல மன்னன் பெருந்தேவன் நிலைகுலைந்து போனது உண்மையான வீரத்தினால் அல்ல..சூழ்ச்சி வலை... ராணி நொடியில் எல்லாவற்றையும் உணர்ந்தாள் பெண்மையின் இயற்கையான மதி நுட்ப பேராற்றல்.

தீயின் நதியாக பாய்கிறாள். எஞ்சிய குதிரை வீரர்கள்.. சில காலாட்படை வீரர்களுடன்.. சேல்விழியாள் போர்க்களத்தில்...

மகாராணி பெருந்தகையே.. வியுகத்தினை உடைத்து முன்னேற சற்று சிந்தித்தல் அவசியம்.... இல்லை என்றால் மன்னர் உயிருக்கு ஆபத்து நேரலாம்...

தேவையில்லை.. அதைவிட நேரில் சென்று நிலைமைகளை உணர்ந்து செயல் படுதலே விவேகம்..

வீரமும்.. நீங்கள் சொல்லும் திட்டமிடுதல்.. முறை போருக்கு முன்.... இப்போது தேவையில்லை எதிர் வருவதை யூகித்தல்.. நேர் முகம் கொண்டு வீழ்த்துதல்..அவசரகால செயல்பாடுகளே சிறந்தது.. துணை சேனாதிபதியே..

சேல்விழியாள் அம்பென காற்றை கிழித்துக் கொண்டு பாய்ந்து சென்றாள்.

மந்தைகள் நடுவே.. மன்னன் வீரவாளை சுழற்றிய படி எதிரிகளை நெருங்க விடாமல் போராடிக் கொண்டிருந்தான் .. நொடிப்பொழுதில் மரணம் பெருந்தேவனை தொட்டு விடலாம்... மன்னனை சுற்றி வளைத்து இறுகி இருந்தது மரண வியூகம்.

விழிவாள்களால் ஏளனமாக உரசி சூடேற்றி கையில் உள்ள வாளால் நெஞ்சை வருடுகிறாள் எதிரி நாட்டு ராணி. நறுமுகை. என் மன்னவன் முன்பு பெட்டைகொக்கரிப்பதா மலர்க்கொடி உரசி மின்னல் வீழ்வதில்லையடி.. மூச்சில் தீப்பொறி பறக்க ராணி நெருப்பு ஆறாக சீறிபாய்கிறாள்..

நொடிப்பொழுதில் கணிக்கிறாள்... மன்னனை சூழ்ந்த வியூகத்தில் உள்ள சிறிய பலவீன புள்ளியை.. மன்னனுக்கு நீதி தவறி போதித்து மக்களை கூறு போடும் மந்திரி.. இந்திரஜித் பின்னிய சூழ்ச்சி வலை

குள்ள நரிக்கு விழியால் மரணக் குறியிடுகிறாள்.. குதிரை வீரர்கள் வடக்கு மேற்கு திசையில் நகர்ந்திட தெற்கு திசையில் யானைப்படை வீரர்கள் குதிரைப் படையின் அசைவுகளை கண் காணித்தபடி பாதுகாப்புடன் நகர்த்தினாள் சேல்விழியாள்.

எதிரி மன்னன் பெருஞ்சீற்றன் படைகளை மின்னல் வேகத்தில் வெட்டி வீழ்த்தியபடி மன்னன் பெருந்தேவனை நோக்கி முன்னேறுகிறாள்..

வாளை உயர்த்தி ஆவேசத்துடன் பாய்ந்து வரும் குள்ளநரி குணமுடைய மந்திரி இந்திரஜித்தை சரேல் என்று வாளை வீசி மண்ணில் சரித்தாள் .. வீணனே.. இது அரச சபை அல்ல போர்க்களம்.. கொள்ளன் பட்டறையில் ஈ க்கு என்ன வேலை... கருங்கல் கோட்டைக்கு ஓதிய மரத்தூண்களா மந்திரியை கொன்று வியூகத்தின் கதவுகளை உடைக்கிறாள் ராணி சேல்விழியாள்.. நேருக்கு நேர் நிலையில் எதிரி நாட்டு ராணி .நறுமுகை.. . அரபு நாட்டு விஷத் தேனி.. புன்னகையோடு வீழ்த்துகிறாள்..

எதிர் திசையில் நகரும் காலாட்



# மது அரக்கன்...

பெரு மூளை இருந்தும் பயனில்லை;
சிறு மூளை வேலை செய்கிறது;
நாவில் நல்ல சொல் லிருந்தும்;
கூட உளறல் வரு கிறது;

இன்று உணவுக்குக் கூட வழி;
இல்லை மதுவுக்கு வழி யிருக்கு;
மடமையைத் தானோட்டு நீ தோழா;
தன் நெஞ்சத்தை வஞ்சகர்க்கு அடகு;

வைக்காதே நீ தோழா தோழா;
வானில் பறப்பது போல மது;
உன் கனவுலகத்தை மாற்றிவிடுமே;
விதி காட்டும் பாதை அது;

உன் அழிவுப் பாதை மாற்று;
தம் மக்கள் வறுமையில் வாடுதே;
உன் கண் தேடுதே மது;
பசிப் போக்க வழி யின்றி;

விழியோடு நீ ஈனும் தொழிலே;
கூக்குரல் உன் செவியில் ஏற்று;
நலம் உடன் சூழ சூழ்ச்சிகளை;
நீ அறுப் பாய் தோழா;

**புலவர். தியாகு. சோமு**

படைகளின் சிரங்களை பூக்களாக கொய்து எறிகிறாள் .. தடுமாறி போவும் திசையறியாமல் தேங்கி நிற்கும் யானைப் படையினை வெல்கிறாள்... எக்காளமிட்டு சிரிக்கிறாள் சேல்விழியாள். முட்டாளே.. பெண்ணை போர்க்களத்தில் ஆடவிட்டு ரசிக்கும் பேடியே..என் மன்னன் முன்பு பேடை கொக்கரிப்பதா.. காத்திரு.. எனது வாளின் எழுது கோலால் உனது மரண சாசனத்தை எழுதுகிறேன்..

இருளில் கதவுகளின் இடுக்கில் நுழையும் மின்னல் கீற்று வெளிச்சம் போல் நொடியில் நுழைகிறாள்... கால்களை உயர்த்தி புழுதிப் புயலாக பாய்ந்து வந்த குதிரை வீரனை வாளால் வீழ்த்துகிறாள் சேல்விழியாள் எண்திசை சுழலும் வேல்விழியாள்.. மன்னனுக்கு பின்னாடி காலாட்படை சிப்பாய்கள் மன்னன் பெருந்தேவன் மரணத்தை தீர்மானிக்கவும் அவனின் மரணத்தை இழிவுபடுத்தவும் உலகின் முன் புறமுதுகினன்... எனும் இழி சொல்லுக்கு ஆளாக்கவும்.. கேவலமான வியூகம் ஒரு நாட்டு மன்னனை கொல் வதற்கு.. வியூகத்தை உடைத்து தகர்த்து எறிகிறாள்... மன்னன் விடுபடுகிறான்.

ராணி சேல்விழியாள் வெற்றி வாகை சூடுகிறாள். குருதி சொட்ட சொட்ட வீர வாளை உயர்த்துகிறாள்..வெற்றி செருக்கில் போர்க்களத்தை நெற்றி உயர்த்தி பார்க்கிறாள் ரணகளம்.. வெட்டி வீழ்த்தப்பபட்ட குறும் பாளைகளாக மனித உடல்கள்.. தரைமட்டமாகி கிடந்தன.. ரத.. கத.. துரக பதாதி கள்.

தலை நிமிர்ந்து பார்க்கிறாள்.. சேல் விழியாள் பெண்ணே உன் ஆற்றல் வலியது.. பிரபஞ்சத்தை துளைக்க வல்லது.. வெற்றி பெருமிதத்துடன்..வலம் வருகிறாள்.

ஒருபுறம் இழிவில் இருந்து காக்கப்பட்ட மன்னன்.. பெருந்தேவன்.. இன்னொரு புறம் தோல்வியில் சிரம் தாழ்ந்து நிற்கும் எதிரி நாட்டு மன்னன் பெருஞ்சீற்றன்..

ராணி சேல்விழியாள் உதடுகளில் ஆணவ

# மந்திர மகள்

எனக்குள்
பூச்சொரியும்
உன்
புன்னகை!

என்
மனசுக்குள்
ஆயிரம் அகல் விளக்குகளில்
ஆனந்தத் தீபமேற்றும்
உன்
விழிவிளக்குகள்!

உன்
ஜிமிக்கிகளின் ஆட்டத்தைக்
கொஞ்சம் நிறுத்தேன்...
பெண்டுலம் ஆகிறதே
என்
இதயம்!

எப்படி.. எப்படி ...
உன் காதோரத்துக் குழலாய்
என்னையே நீ
சுருட்டிக் கொண்டது
எப்படி ... எப்படி ...?

நீ
ஒரு நட்சத்திரப் பொட்டோடுதான்
வந்தாய்
அங்கே பார்
வானம்
நிலாவைத் தொலைத்துவிட்டு
அழுகிறது!

உன்
கால் கொலுசுக்குள் என்ன
கம்ப்யூட்டர் இசையா?
அங்கே... வாணி...
தன் வீணையில்
நாதம் எழவில்லையென
புலம்புகிறாள்!

**வெற்றிப்பேரொளி**

சிரிப்பு முகிழ்க்கிறது அவளையும் அறியாமல்..

நன்றி உயிரே.. உனது பெண்மையின் வீரம் என்னை இழிவான மரணத்திலிருந்து காத்தது உன் பெண்மையின் வீரத்தினை வணங்குகிறேன்..

ராணியின் உதடுகளை தனது வாளால் வருடி முத்தமிட்டு.. முயங்குகிறான்.. பெருந்தேவன்

போதும் மன்னா.. சினத்தில் கிளர்ந்து நிற்கும் பெண் சிங்கத்தை படுக்கை அறை பூனை ஆக்காதீர்கள்... என் வெற்றி இன்னும் தீர்மானிக்கப்பட வில்லை...

இதோ உங்களை இழிவு படுத்த நினைத்த எதிரி நாட்டு மன்னனின் சிரம் இன்னும் மண்ணில் ஊருண்டு வந்து என் பாதத்தின் கீழ் விழ வேண்டும்..

மன்னன் சிரித்தான்... உன் வெற்றி எனது வெற்றியல்லவா மனைவியின் வெற்றி கணவனை சாரதா தேவி ராணி ஜெயித்தாலும் வெற்றி மன்னவனைத்தானே சாரும். பிரித்தாள்கிறாய் தேவி..

ஆண்மையின் பொறாமை தலை தூக்கி நின்றது அவனது பேச்சில்.

ராணி சேல்விழியாள் எதிரில் மண்டியிட்ட நிலையில்.. அமர்ந்திருந்தான் பெருஞ்சீற்றன்..

ராணி சேல்விழியாள் வாளை உயர்த்தினாள்.

நிறுத்து...தேவி.. இவன் ஆண்மகன்.. ஒரு நாட்டு மன்னன்.. அதிலும் என்னிடம் மண்டியிட்டு சரணடைந்தவன்... இவனை மன்னிப்பதும்.. மரணிக்க செய்யும் அதிகாரமும் மன்னனுக்கே உண்டு..

சற்று விலகி நில் ராணி..

மன்னிக்கவும்... மன்னா.. இந்த தன்மானம் கெட்ட வீணனின் சதி செயலை முறியடித்து உங்களிடம் சரணடைய வைத்தது நான்.. காலாட் படையின் சாதாரண வீரர்களால் தீர்மானிக்க பட்ட மரண வியூகத்திலிருந்து தங்களை பாதுகாத்தவளும் நான்தான் மன்னா..

இந்த நாட்டின் ஒவ்வொரு சாதாரண பிரஜையின் கடமை அது மகாராணி..

அதுதான் முறையான போர்க்கள செயல். நீ உன் கடமையை செய்து முடித்து விட்டாய்..

இனி தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தில் நான் இருக்கிறேன்...

விலகி நில்.. ராணி...

எதிரி நாட்டு மன்னனுக்கு என் கையால் கௌரமான மரணத்தை தருகிறேன்.. அவனின் உயிரால் உனது வீரத்தை கழுவி கௌரவப்படுத்துகிறேன்..

மன்னிக்கவும் மன்னா அந்த குக்கல் எனது வாளுக்கு இரையாகட்டும்.. அவனுக்கு அது இழிவு மரணமாக அமையட்டும்... எனது வீரசெயல் முழுமை பெறட்டும்..

ராணி சேல்விழியாளே. அவன் என்னிடத்தில் சரணடைந்தவன் மன்னன் எனும் அதிகாரத்தில் இருந்து அவனைக் கொல்லும் அதிகாரம் என்னிடம் உள்ளது விலகி நில்.. ராணி.. சேல்விழியாளே..

மன்னன்சட்டென்று மின்னல் வேகத்தில் வாளால் எதிரி மன்னன் பெருஞ்சீற்றன் தலையை கொய்தான்...தலை உருண்டோடி தூர விழுந்தது.

ராணி ஹா ஹா வென்றுபோர்க்களம் அதிர்ந்திட சத்தமிட்டு சிரித்தாள்..

மன்னன் புரியாமல் விழித்தான்.

என்னாயிற்று தேவி. வெற்றியின் களிப்பா.

ம்ம்.. இல்லை மன்னா.. ஒரு பெண்ணின் வெற்றியை ஏற்று அங்கீகரிக்கும் ஒரு கண்ணியமான ஆண்மகன் கூட இந்த பூமியில் இன்னும் பிறக்கவில்லையே என்கிற ஏமாற்றத்தாலும் ஆதங்கத்தினாலும் சிரிக்கிறேன்..

அரசவையில் மன்னன் தனது போரின் வெற்றியை பறை சாற்றிக் கொண்டிருந்தான்.

ராணி சேல்விழியாள்..ராஜா பெருந்தேவன் அருகில் அமைதியாக அமர்ந்திருந்தாள்... கொலு மாடத்து ராணி பொம்மையைப்போல்.

ஒவ்வொரு ஆண்மகன் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் நிற்கிறாளா.. இல்லை நிறுத்தப்படுகிறாளா...? ■

# நல்வழி காட்டும் ஔவை!

பெருமைசேர் பாரதத்தில் வந்துதித்த தவப்பெண்ணே!
பாரது போற்றும் தமிழ்ப்பெண்ணே - ஔவையே!
பைந்தமிழ் கொண்டு நலந்தரும் பண்புகளைப்
புவனமது நலம்பெற நயம்பட மொழிந்தீரே!

ஆரிநிறை ஆத்திசூடியும் கசடகற்றுங் கல்வியொழுக்கமும்
நலமளிக்கும் நல்வழியும் ஞானந்தரும் ஞானக்குறளும்
கழுமமகற்றுங் கொன்றைவேந்தனும் மூதுரையும் இவைபலவும்
நற்றமிழில் நலமுறப் புனைந்தீந்த ஆயிழையே!



அகர வரிசையில் அறம்பல ஓதி
அகிலஞ் செழிக்க நல்வழி காட்டி
இருமூன்று சொற்களில் இகபரம் உரைத்து
இன்பமாய் வாழ்ந்திட இன்னுரை தந்தனளே!

பாவங் களைந்து புண்ணியஞ் சேர;த்துப்
பழுதும் பளகும் நீக்கிநாம் இயனெறியில்
அகவிருள் அகற்றி உள்ளொளி பெருக்கி
ஆனந்தமாய் வாழ்ந்திட அறவுரை இசைத்தனளே!

அன்னையும் பிதாவும் தெய்வம் என்றுரைத்து
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோரென்று
ஈகையைப் போற்றிச் சாதியைத் தகர்த்து
வீடுபெற நில்லென இலக்கு இடித்துரைத்துப்

பாமரர் பண்டிதர் மானிடர் யாவர்க்கும்
செந்தமிழில் நங்கையவள் மொழிந்த அறவுரைகளை
அடியொற்றி வாழ்ந்தால் அகிலம் ஏத்துமே!
பீடும் புகழுங்கூடி வாழ்க்கை உயர்வுறுமே!

**தமிழ்க்கீரன், த.கி.ஷர்மிதன் பி.ஏ.**
ஈழம்.

# காடுகள்

புதுவைத் தமிழ்நெஞ்சன்

காடுகள் - நம்
வாழ்விடத்தின் கடைகால்கள்
ஆனால்... நாம்
தகர்த்துக் கொண்டிருக்கிறோம்.

காடுகள் - நம்
உயிர்வளி சேமிப்பகங்கள்
ஆனால்... நாம்
செலவழித்து கொண்டிருக்கிறோம்.

காடுகள் - நம்
உடலில் உயிராடைகள்
ஆனால்... நாம்
கிழித்துக்கொண்டு இருக்கிறோம்.

காடுகள் - நம்
வாழ்க்கைப் படகுகள்
அதிலே... நாம்
துளை போட்டுக்கொண்டு இருக்கிறோம்.

காடுகள்
பறவைகளின் வீடுகள்
நாம்
கலைத்துக் கொண்டிருக்கிறோம்.

காடுகள்
மரங்களின் மாநாடுகள்
நாம்
பயனின்றி கூடிக்கூடி
கலைந்து கொண்டிருக்கிறோம்.

காடுகள்
வாழ்க்கைப் புத்தகங்கள்
நாம்
படிக்க விரும்பாமல்
கிழித்துக்கொண்டு இருக்கிறோம்.

காடுகள்
பூ மாலைகள்
நாம்
குரங்குகளாக மாறி
பிய்த்துக் கொண்டிருக்கிறோம்.

காடுகள்
நம் தாய் தந்தைகள்
முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு
ஏதிலிகளாக திரிகிறோம்.

காடுகள்
நம் குழந்தைகள்
கொஞ்சி கொண்டாடாமல்
திண்டாடா விட்டுவிட்டோம்.

காடுகள்
நம் தோழன்கள்
தோள்கொடுத்து துணைநிற்காமல்
இரண்டகம் செய்து கொண்டிருக்கிறோம்.

காடுகள்
நம் தோழிகள்
நட்பு பாராட்டாமல்
சிதைத்து கொண்டிருக்கிறோம்.

காடுகள்
நம் உயிர் உறவுகள்
மறந்து தொலைத்து விட்டு
நடுத்தெருவில் நிற்கிறோம்.

காடுகள்
உயிர்களின் வாழ்விடம்
நாம்
அழித்துக் கொண்டிருக்கிறோம்.

# வாரியார் படைப்பில் வாழ்வியல் நெறிகள்

நல்லாசிரியர் வே. பூங்குழலி பெருமாள்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுச்சேரி

"அன்பால் அறிவால் அகங்குளிரும்
அமுதமொழியால் அனைவரையும்"

தன்பால் ஈர்க்கும் தகைமிகு பேச்சாளர், நல்ல எழுத்தாளர், மூதறிஞர், சித்திரகவி பாடிய கவிஞர், முத்தமிழ் அறிஞர், ஆன்மீகச் செம்மல் என்று அடுக்கிக் கொண்டே போகக்கூடிய வல்லமை பெற்ற வாரியார் சுவாமிகளின் நூல்களைப் படிக்கும் பொழுது தனிப்பெரும் இன்பம் தன்னால் வருவதை நாம் உணர முடியும்.

இளமையிலே பல நூல்களைப் படித்த பெருமைக்கு உரியவர் வாரியார் சுவாமிகள். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் நோக்கில் தான் பெற்ற இன்பத்தை அடுத்தவர்க்கு அள்ளி வழங்கியவர் வாரியார் சுவாமிகள்.

இயல் இசையில் வல்லவரான மல்லைய தாசருக்கும், தெய்வ பக்தி நிறைந்த கனகவல்லி அம்மையாருக்கும் பிறந்த பதினோரு பிள்ளை களில் நான்காவதாகப் பிறந்தவர் இவர். 1906 ஆம் ஆண்டு ஆகஸ்டு 25 ஆம் நாள் காங்கேய நல்லூரில் அவதரித்தவர் திருமுருக கிருபானந்த வாரியார்.

நவமணிகளில் சிறந்தது முத்து மற்றைய மணிகள் எல்லாம் சாணை கொடுத்தால்தான் ஒளி உண்டாகும். முத்து பிறவியிலேயே ஒளியை உடையதாம். அதுபோலப் பிறவி யிலேயே ஞானத்தைப் பெற்றவர் வாரியார் சுவாமிகள்.

ஒருநாள் சின்னஞ் சிறுவனாக இருந்த வாரியார் உடையை மடக்கிக்கொண்டு நிலத் தில் உட்கார்ந்தாராம். உடனே அவரது தாயார் கனகவல்லி அம்மையார், வாரியாரைப் பார்த்து, சிறு குழந்தையாகிய நீ அழுக்குத் தரையில் உட்காரக் கூசுகிறாய். உள்ளத்திலே ஆசா பாசங்களான அழுக்குகள் இருந்தால், அந்த அழுக்குப் பிடித்த உள்ளத்திலே இறைவன் உட்காரக் கூசுவான். ஆகவே, நீ உள்ளம் தூயவனாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

அன்னை கூறிய நன்னலம் மிக்க சொன்னயம் பசுமரத்தாணிபோல் தன் நெஞ்சில் பதிந்தது என்ற தன் வரலாற்றைச் சொல்லும் போது வாரியாரே இதைப் பதிவு செய்திருக்கின்றார்.

"தாமின் புறுவது உலகின் புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

(குறள். 399)

எனும் வள்ளுவர் குறளுக்கேற்ப எளிமை யாகவும், ஆழமாகவும் மற்றவர் நெஞ்சில்

பதியக் கூடிய கருத்துகளைத் தன் உரையால், எழுத்தால், கதைகளால் உலகிற்கு வழங்கிய பெருமைக்கு உரியவர் வாரியார் சுவாமிகள்.

வாரியாரின் படைப்புகள் அத்தனையும் வாழ்வியல் நெறி உணர்த்தும் காலப் பெட்டகங்கள், கருத்துக் கருவூலங்கள் என்றால் அது மிகையாகாது. அவற்றுள் ஒரு சிலவற்றை இக்கட்டுரையில் வெளிப்படுத்த விழைகின்றேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

(குறள். 666)

என்பார் திருவள்ளுவர்

நாம் எதை நினைக்கின்றோமோ அதை நினைத்தபடி அடைய முடியும், எப்பொழு தென்றால் நாம் திண்ணிய நெஞ்சம் உடையவராய் இருந்தால்.

மனிதன் மட்டுமே மனத்தை உடையவன். ஆறறிவு உடையவன். ஐயறிவு கொண்ட விலங்குளுக்கு வாய் இருந்தாலும் அவற்றை வாயில்லா பிராணிகள் என்கிறோம். ஏன் தெரியுமா? சிந்திக்கும் ஆற்றல் இன்மையால் சிந்தித்ததை அவற்றால் சொல்ல முடிவ தில்லை.

ஆனால் மனிதன் மனத்தை உடையவன் சிந்திக்கின்ற ஆறாவது அறிவு உடையவன். மனத்தினால் எண்ணியதை எண்ணியபடி எல்லோராலும் செய்ய முடியுமா? என்றால் முடியாது.

எண்ணியதை எண்ணிபடிச் செய்ய லாம். ஆனால் நல்லதைச் செய்ய வேண்டும் என்றால் அங்கு இறைவன் வந்து உட்கார்ந்திருக்க வேண்டும். எல்லா இடத்திலும் அங்கிங்கெணாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் நம் மனத்தில் வந்து இருந்தால் மட்டுமே நாம் நினைத்ததை நினைத்தவாறு செய்ய முடியும்.

தூய்மையான இடத்தில்தான் இறைவன் இருப்பான். எனவே, நம் உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்கினால்தான் அங்கு இறைவன் வந்து உட்காருவான். மனத்தழுக்கு நீங்கி னால்தான் அறச் செயல்களைச் செய்ய முடியும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற."

(குறள். 32)

என்பார் வான்புகழ் வள்ளுவர்.

மனத்தழுக்கு எது? ஆசையே மனத் தழுக்கு என்கிறார். வாரியார் ஆசையினால் பொறாமை உண்டாகும்.

பொறாமையும், ஆசையும் கோபத்தை உருவாக்கும் கோபத்தினால் இன்னாச் சொல் பிறக்கிறது. இந்த மனத்தழுக்குகள் நீங்கினால்தான் எண்ணியதை எண்ணி வாறு செய்ய முடியும்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

(குறள். 35)

என்பது குறள் கூறும் வாழ்வியல் நெறி

அழுக்காறு என்பது பொறாமை. அதாவது பிறருடைய கல்வி, புகழ் முதலிய உயர் குணங்களைக் கண்டு மனம் பொறாமல் உள்ளம் புழுங்கும் தீயநெறியே பொறாமை. இது மனிதனுடைய மனத்தை அழுக்காகிறது. இழுக்கு மிகச்செய்யத் துணிகிறது.

பிறர் செல்வம், பிறர் வளர்ச்சி என்று பிறரது மேன்மைகளைக் கண்டு உள்ளம் பொறாமல் புழுங்குவதே அழுக்காறு.

"அழுக்காற்றால் நெஞ்சம் அழுங்கிய புன்மாக்கள்
இழுக்காற்றால் இன்பநலம் எய்தார் பராபரமே"

என்பார் தாயுமானவர்

பொறாமை உடையவர்களுக்கு வேறு பகைவர்களே வேண்டாம். அந்தப் பொறாமையே அவர்களுக்குத் துன் பத்தைக் கொடுக்கும். எனவே, அடுத்த வர்மேல் நமக்கு ஏற்படும் பொறாமை நம்மையே தாக்கும் என்பதை வாரியார் சுவாமி கள் ஓர் அழகான கதை மூலம் நமக்கு உணர்த்துகிறார்.

ஒரு மன்னவன் சீரும்சிறப்பும் உடைய

வனாக இருந்தான். செல்வம் படைத்தவன் ஆயினும், சுயஅறிவு இல்லாதவன் பிறர் கூறும் சொல்லை நம்பு கின்ற இயல்புடையவன். தன்னிடம் வந்து முகஸ்துதி செய்பவர்க்கு அள்ளிக் கொடுக்கும் குணம் படைத்தவன். பலர் அவனைப் புகழ்ந்து பேசி ஏமாற்றிப் பெரும்பொருள் பெற்றுச் சென்றார்கள்.

அந்தஅரசனிடம்ஆடைகளைவெளுத்துக் கொடுக்கும் ஏகாலி ஒருவன் இருந்தான். தனது வேலையைச் சுத்தமாகச் செய்வான். நம்பிக்கையானவன். அடக்க மாகவும், அன்பாகவும் அரசனிடம் பழகி னான். அதனால் அரசனுக்கு அவன் மீது இரக்கம் ஏற்பட்டது. ஏகாலிக்கு நூறு, இருநூறு என்று அவ்வப்போது தாராளமாகத் தந்தான்.

அந்த அரசனிடம் மண்பானைகள் செய்யும் குலாலன் ஒருவனும் இருந்தான். அவனுக்கு ஏகாலி மீது பொறாமை ஏற்பட்டது.

"அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கும்

பேணா தழுக்கறுப் பான்"

(குறள். 168)

எனும் வள்ளுவர் சொன்ன குறளுக்கு இலக்கணம் ஆனான் அந்தக் குலாலன்.

ஏகாலி மீது கொண்ட பொறாமை யினால் அவனைப் பற்றி அரசனிடம் கோள் சொல்லி அரசனுடைய அபிமானத்தை மாற்றிவிட வேண்டும் என்று எண்ணினான்.

ஒருநாள் அரசனிடம் சென்று வணங்கி நின்றான். "என்ன குலாலனாரே" நலமா? என்ன சேதி ஏதாவது வேண்டுமா? என்று கேட்டான் மன்னவன்.

குலாலன், "அரசே! தங்கள் பெருமை எங்கும் பரவி யுள்ளது. ஆ! ஆ! தங்கள் புகழே புகழ். தங்களைப் போன்ற உத்தம அரசர் உலகிலேயே கிடையாது. முன்னும் இருந்ததில்லை. இனியும் இருக்கப் போவதில்லை. தங்கள் கீர்த்தி எட்டுத் திசைகளிலும் முட்டிப் பரவி உள்ளது. தங்கள் நற்குணங்களைப் போற்றாதவர்களே இல்லை. இந்திர போகமே உங்களிடம் அமைந்துள்ளது. ஆனால், ஒரு குறையுள்ளது. அதுவும் நீங்கிவிட்டால் தாங்கள் பூலோக இந்திரனைப்போல இருக்கலாம் என்றான்.

உடனே அரசன், "அப்பா! எனக்கு என்ன குறை? அதனைச்சொல்" என்றான்.

குலாலன், "அரசே! வேறு ஒன்றுமில்லை. உங்களிடம் எல்லாம் அமைந்திருக்கின்றன. ஆனால், வெள்ளை யானை



ஒன்றுதான் இல்லை. இந்திரனுக்கு வெள்ளை யானை உண்டல்லவா? உங்க ளிடம் கருப்பு நிற யானைதானே இருக்கின்றது. நமது அரண்மனை ஏகாலியிடம் கூறி அந்த யானையை மெல்ல வெளுத்துத் தருமாறு கட்டளை யிடுங்கள். வெளுத்துத் தந்துவிடுவான்.

பின்னர், வெள்ளை யானையோடு கூடிய தாங்கள் பூலோக இந்திரன் என்ற புகழ் பெற்று விளங்குவீர்" என்றான்.

மன்னன் சிறிது மதிநலம் குறைந்தவன் அல்லவா? யானையை வெளுக்க வைக்க முடியுமா? என்ற அறிவுகூட இல்லை. உடனே தனது அரண்மனை ஏகாலியை அழைத்து, "அப்பா ஏகாலி, நமது அரண்மனையில் உள்ள பட்டத்து யானையைக் கொண்டு போய் எட்டு நாட்களுக்குள் வெளுத்துக் கொண்டு வா!" என்றாள்.

பின், வெள்ளை யானையாக இருக்க வேண்டும், உனக்கு நிறைய பணம் தருகிறேன். ஆனால் காரியத்தை மட்டும் கருத்துடன் செய்து முடிக்க வேண்டும் இல்லையேல் சிரச்சேதம் செய்வேன் போய்வா" என்றான்.

ஏகாலி இந்த உத்தரவைக் கேட்டு நடுங்கி விட்டான். தமது வாழ்வு முடிந்தது என்று எண்ணினான். மறுத்துப் பேசுவதற்குத் தைரியம் இல்லை. தலை குனிந்த வண்ணம் "நல்லது" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அரண்மனையை விட்டுப் போகும் போது ஒரு புறம் குலாலன் நின்று அவனைக் கண்டு சிரித்தான். அதனைக் கண்ட ஏகாலி, ஓ இவன்தான் இந்த வினையை மூட்டினானா? என்று ஊகத்தால் உணர்ந்தான்.

கடவுளை நினைத்து, தெய்வமே நீதான் எனக்குத் துணை, உன்னை ஒழிய ஒருவரையும் நான் நம்பமாட்டேன். என்று துதிசெய்து கொண்டே சென்றான் ஏகாலி.

அரண்மனையிலிருந்து கொண்டு சென்ற யானை ஏகாலி வீட்டின் பின்புறம் நின்று கொண்டிருந்தது. எட்டுநாள் கடந்தது.

இன்று ஏகாலியின் தலைபோகும் என்று எண்ணி மகிழ்ந்தான் குலாலன்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

(குறள். 319)

என்று உணராமல் இடைக்கால நிவாரணம் போல் மகிழ்ந்தான் குலாலன்.

மெல்ல அரசனிடம் போனான். அரசே, தங்கள் கட்டளையை ஏகாலி நிறை வேற்றினானா? சுத்த சோம்பேறி அவன். தங்கள் கட்டளையில் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை என்று கூறினான்.

உடனே, அரசன் ஏகாலியை அழைத்து "ஏகாலி, என்ன... யானையை வெளுத்து விட்டாயா? இன்றுதானே எட்டாவது நாள்." என்று கோபத்துடன் கேட்டான்.

ஏகாலி, வணக்கமாக நின்று, "மன்னர் பெருமானே! கருணாநிதியே! தங்கள் கட்டளையை நிறைவேற்ற நான் பின்னடைவேனோ? தங்கள் வாக்கு வேதத்திலும் மேலான தல்லவா? இது என்ன, யானையை வெளுப்பது ஒரு பெரிய காரியமா? சுலபமாகச் செய்து முடிப்பேன்.

ஆனால், ஒரு சிறு தடையுள்ளது மன்னா, துணிகளைப் பானையில் இட்டு அடுப்பில் வைத்து அவித்துத்தான் வெளுக்க வேண்டும்.

எனவே, நமது குயவனாரை யானையை வைத்து அவிப்பதற்கு ஏற்றவாறு ஒரு பானையைச் செய்து கொடுக்குமாறு ஏற்பாடு செய்யுங்கள். அது மட்டுமல்ல, பானையில் யானை ஏறினால் அப்பானை உடையாமல் கெட்டியாகவும் இருக்குமாறு செய்யச் சொல்லுங்கள்.

பானை வந்துவிட்டால் ஒரே நாளில் வெளுத்து வெள்ளை யானையைக் கொண்டு வந்து அரண்மனையில் கட்டுவேன்" என்றான்.

உடனே அரசன் குலாலனை நோக்கி, அப்பா, ஏகாலி சொல்வது நியாம்தான், ஆடைகளைப் பானையில் இட்டுத்தானே

அவிக்கின்றார்கள். ஆகவே, யானைக்கு ஏற்ற பானையை உடனே செய்து கொடு. இல்லையேல் உன்னைச் சிரச்சேதம் செய்வேன்" என்று கட்டளை இட்டான்.

"நீங்கரும் பொறாமை உள்ளோர்
நிலத்திடைக் கெடுவர் நெஞ்சே"
- நீதிநூல். ஆதி.26

என்று பொறாமைப் படுபவர்கள் உலகத்தில் கேட்டையே அடைவார்கள் என்கிறார் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும், ஆகையால், குற்றம் செய்யாமல் இருப்பதை நோக்கமாகக்கொண்டு தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதை

"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை"
(குறள். 434)

என்கிறார் வான்புகழ் வள்ளுவர்.

அரசன் கூறியதைக் கேட்ட குலாலன் நடுநடுங்கிப் போனான். வேலிக்கு இட்ட முள் தன் காலுக்கு வந்தது போல் ஆயிற்று.

பொறாமையினால் ஏகாலிக்குத் துன்பம் கொடுக்க நினைத்தான். அந்தத் துன்பம் அவனுக்கே வந்து சேர்ந்தது.

என்ன செய்வது? என்று தெரியாமல் நரியைப் போல் விழித்துக் கொண்டே சென்றான்.

நேரே, ஏகாலியின் வீட்டுக்குப் போனான், தம்பி இது என்னப்பா? பெரிய ஆபத்தில் என்னைச் சிக்க வைத்து விட்டாயே! யானைக்குப் பானை செய்ய முடியுமா? அரசனோ, அறிவில்லாதவன். என் தலையை வெட்டி உருட்டி விடுவானே! என்று புலம்பினான்.

"அண்ணே, நீதானே முதலில் என் தலையை உருட்ட ஏற்பாடு செய்தாய்.

வினையை விதைத்தவன் வினையைத் தானே அறுப்பான்? வேட்டியை வெளுத்துக் கொடுத்துச் சிவனே என்று இருந்த என்னை, யானையை வெளுத்துத்

# வசந்த கால நிகழ்வுகள்



சிலர் அமர்ந்திருக்க
பலர் நடந்தபடி இருக்கிறார்கள்
காலையில் நடைப்பயிற்சியும்
மாலையில் நட்புகளுடன்
உரையாடியபடி மகிழ்தலில்
அவ்வப்போது
மனத்தின் அடித்தட்டு
லேசாகிப் போகிறது
எதிர்வினையாற்ற மறந்துபோன
சம்பவங்கள் மீண்டெழ
வாய்ப்பை இழக்கின்றன
புரிதலின் நிமித்தம் கைகளுக்குள்
கிளிஞ்சல்கள் அகப்பட்டு
மொழிதலின் வழியின்றி காலத்தோடு
இடம்பெயர்கின்றன
உள்வாங்கியும் தோற்றங்களைப்
புதுப்பித்துக் கொண்டாலும்
அலைகள் மட்டும் அப்படியே
ஒரு தேடலின் குறியீட்டில்
தடம்புரளவில்லை
புதையுண்டு போன
வசந்த கால நிகழ்வுகளை
நினைவு கூறும்
கடற்கரை மணல் வெளிகள் மட்டுமே
காலம் காலமாய்
கண்களுக்குள் உப்புக்கரைசலாய்
நிலைத்திருக்கின்றன

**கா.ந.கல்யாணசுந்தரம்**



# நேரடி பேச்சு இல்லை

புரிதலின்றி
பிரிந்திருக்கிறோம்
அறிதலின்றி
விலகியிருக்கிறோம்
நேரடி பேச்சும் இல்லை
பார்வைகளும்
பேசிக்கொள்வதில்லை
உங்களைத் தொடர்புகொள்ள
முயன்ற போதெல்லாம்
ஏமாற்றங்களே
யாருக்கோ எதற்கோ
நாம் கலந்திருப்பது
பிடிக்கவில்லை போலும்
நம்மை பிரித்து வைப்பதில்
இருக்கும் சந்தோஷம்தான்
சேர்த்து வைப்பதில் உதவுகிறது
என்பது தெரியாதோ
தெரிந்தும் கூட பிரிந்திருக்கலாம்
ஒருவரையொருவர் இனியாவது
அவ்வபோது சந்தித்துக்கொள்வோம்
அன்புடன் புழங்குவோம்
................!

**- வாசகன்**

தருமாறு அரசனிடம் கோள் மூட்டினாய் அல்லவா?

நானும் ஒரு தொழிலாளி, நீயும் ஒரு தொழிலாளி, ஒரு தொழிலாளி மறு தொழிலாளிக்கு அனுகூலம் புரிவதா? பிரதிகூலம் புரிவதா?

அண்ணே, நாமே நம்மில் ஒருவருக்கொருவர் நன்மையைச் செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் இருக்க வேண்டாமா?

நீ என் வாழ்வில் கொள்ளி வைத்தாய்! காற்று வேகத்தால் உன்வாழ்வுக்கு அக்கொள்ளி வந்து சேர்ந்தது. இப்போது என்னிடம் வந்து மோதிக் கொண்டால் நான் என்ன செய்வேன் என்றான்.

“தம்பி, உனக்கு ஒரு கோடி கும்பிடு போடுகிறேன். அப்பா நான் பிள்ளைக்குட்டிக்காரன் என் தலையைக் காப்பாற்று” என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

“இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.”
(குறள். 987)

எனும் வள்ளுவர் குறளுக்கு ஏற்ப மறுநாள் ஏகாலி குலாலனாரை அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்றான். வணங்கி நின்று, அரசே, குலாலனார் ஆனைக்கு ஏற்ற பானை செய்ய முயலும் போது இந்தத் தகவல் எப்படியோ இந்திரன் காதுக்கு எட்டிவிட்டது. பூலோகத்தில் எனக்குப் போட்டியாக இன்னொரு வெள்ளை யானை இருப்பது முறையல்ல. அப்படி இருக்குமானால் அந்த அரசனை உடனே கொன்றுபோடு! என்ற காலதூதனுக்கு கட்டளை இட்டாராம். அதனை அறிந்து தங்களிடம் கூறவந்தேன் என்றான்.

மன்னன் இதைக்கேட்டு அஞ்சினான். ஓ!.. அப்படியா? யானையை வெளுக்க வைக்க இனி எந்த முயற்சியும் செய்ய வேண்டாம். உங்களுக்கு வீண் துன்பம் தந்துவிட்டேன். இந்தாருங்கள் அதற்காக ஆளுக்கு ஆயிரம் வராகன்கள் கொண்டுபோய் சுகமாக

இருங்கள் என்று இருவருக்கும் பொருள் தந்தான். இருவரும் அப்பொருளைப் பெற்றுக் கொண்டு திரும்பினார்கள்.

ஏகாலி, குலாலனாரை நோக்கி, இப்போதாவது புத்தி வந்ததா? எப்பொழுதும் ஒருவன் மற்றொருவனுக்கு உபகாரம் புரிந்து ஒற்றுமையாக வாழ வேண்டும்.

“நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை”

என்பது ஆன்றோர் வாக்கு.

பொறாமைப்படுகின்ற இந்த மனத் தழுக்கு எதனால் வருகின்றது என்றால் ஆசை. இந்த ஆசை நான்கு வகைப்படும் என்பார் வாரியார் சுவாமிகள்.

பற்று : உள்ள பொருளின் மீது வைக்கின்ற பிடிப்பு

அவா : இன்னும் அது வேண்டும், இதுவேண்டும் என்ற நினைவு.

ஆசை : அடுத்தவர் பொருளை விரும்பி நிற்பது.

பேராசை : எத்தனைதான் வந்தாலும் திருப்தி இல்லாத ஆசையின் உச்சம்.

''ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழி நாசியயாடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெலும் அவாவினையே''

என்பார் அருணகிரிநாதர்.

இந்த ஆசை மூன்று வகைப்படும் என்பார் வாரியார், அவை பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை.

பொன்னாசையும், மண்ணாசையும் மனிதப் பிறப்புக்கே உரியன. பெண்ணாசையோ எல்லாப் பிறவிகளுக்கும் உரியது. பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் பெண்ணாசையும், அடுத்தவர் பொருள் மீது வைக்கின்ற பொன்னாசையும், மண்ணாசையும் விளைவிக்கும் பயன் எதுவும் இல்லை. அழிவு ஒன்றையே அது தரும். என்பதை உணர்ந்து அடுத்தவர்க்குச் சொந்தமானவற்றின் மீது வைக்கின்ற ஆசையை விட்டொழியுங்கள் என்கிறார் வாரியார் சுவாமிகள். இதற்கு அவர் சொல்லும் கதை

குப்பனும் சுப்பனும் வயிற்றுப் பிழைப்புக்காகச் சம்பாதிக்க வேண்டுமென்று சந்தைக்குச் செல்கின்றார்கள். வழியில் ஒரு சிறு காடு, சிறு சிறு செடிகள் அடர்ந்து இருக்கின்றன. ஒரு துறவி பெருமூச்சு விட்டுக்கொண்டே, ஐயோ! ஆட்கொல்லி, ஆட்கொல்லி! என்று சத்தம் போட்டுக் கொண்டே வந்தார்.

“சாமியாரே! நில்லும். ஏன் இப்படிப் பயந்து ஓடி வருகின்றீர்? என்ன ஐயா விசயம்? “என்று இருவரும் துறவியரைக் கேட்டனர்.

‘ஐயோ! அங்கே ஓர் ஆட்கொல்லி இருக்கின்றது. அதைப் பார்த்து என் நெஞ்சு அஞ்சுகின்றது. அதனால்தான் ஓடுகின்றேன்.’ என்று கூறிவிட்டுச் சென்றார் துறவி.

குப்பன், ‘சுப்பா ஆட்கொல்லி என்றால் அது என்ன மிருகம்? சிறுத்தைப் புலியா? கரடியா? நாம் இன்று மாலை இந்த வழியாகத்தானே வர வேண்டும். நம்மைக் கொன்றுவிடுமே! ஆதலால் அந்த ஆட்கொல்லியைக் கொன்றுவிட்டால் நல்லது என்றான்.

சுப்பன் ஒரு பெரிய மூங்கிலை எடுத்து, அதன் நுனியில் ஒரு கத்தியைக் கட்டி, அங்குள்ள புதர்களைத் தட்டிக்கொண்டே சென்றான். ஒரு புதரில் தட்டியவுடனே கணீர் என்று சத்தம் கேட்டது. இருவரும் நடுங்கிப்போனார்கள். “அடேய் என்னமோ ஓசை கேட்கிறது? என்று மெல்லப் புதரைத் தட்டியால் நீக்கிப் பார்த்தார்கள். அங்கே தங்கக்காசுகள் நிறைந்த ஒரு தங்கக்குடம் இருந்தது.

இருவருக்கும் எல்லையில்லாத ஆனந்தம். இந்தச் சாமியார் ஒரு பித்துப் பிடித்தவன். இந்தத் தங்கக் குடத்தைக் கண்டு இந்த மாதிரி பயந்து ஓடுகிறானே! நல்ல காலம் இது நமக்குக் கிடைத்தது. ஆகா! நம் வறுமை நீங்கியது. இனி, நாம் இருவரும் கோடீஸ்வரர்கள் என்று மகிழ்ந்தார்கள்.

மெல்ல அந்தத் தங்கக் குடத்தை

எடுத்துக் கொட்டி எண்ணிப் பார்த்தார்கள். 6000 தங்கக் காசுகள் இருந்தன. ஆளுக்கு மூவாயிரம் பவுன் எடுத்துக்கொள்வோம். குடத்தை இரண்டாக உடைத்துப் பங்குப் போட்டுக் கொள்வோம் என்று முடிவு செய்தனர்.

இப்போது கொண்டு சென்றால் யாரேனும் பார்த்து விடுவார்கள். அரசாங்கத்துக்கு அறிவித்து விடுவார்கள். நமக்குக் கிடைக்காமல் போய்விடும். எனவே, இருட்டிய பின்னர் எடுத்துச் செல்வோம் என்று முடிவு செய்து அப்புதரிலேயே மறைத்து வைத்துக் காவல் செய்தனர்.

உச்சிப் பொழுது வந்தவுடன், குப்பா, பசிக்கிறது, நீ ஊருக்குள் போய் ஓர் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு எனக்கு ஓர் எடுப்புச் சோறு கொண்டு வா. நான் இங்குக் கவனமாகக் காவல் புரிந்து கொண்டிருக்கின்றேன்" என்றான் சுப்பன்.

'நல்லது' என்று கூறிவிட்டுச் சென்றான் குப்பன். போகிறபோது மனத்துக்குள் சிந்தனை அலை மோதியது.

இந்தச் சுப்பன் பயலை இன்று ஏன் நான் அழைத்து வந்தேன். அவன் என்ன குனிந்து நிமிர்ந்து பாடுபட்டானா? அந்தப் பயலுக்கு எதற்கு மூவாயிரம் பவுன் தரவேண்டும். அவன் வராமல் இருந்திருந்தால் 6000 பவுன் எனக்கே கிடைத்திருக்கும் எனறு சிந்தித்தவன் பணத்தின் மீது உள்ள ஆசையினால் அவனை ஒழித்துக்கட்ட முடிவு செய்தான்.

ஊருக்குள் சென்று சாப்பிட்டுவிட்டு சுப்பனுக்கு சாப்பாடு வாங்கினான். கூடவே விடமும் வாங்கிக் கொண்டான். அன்னம் குழம்பு இவற்றோடு நஞ்சும் கலந்து வைத்துச் சுப்பனுக்கு எடுத்துச் சென்றான். சுப்பன் இந்த உணவை உண்டபின் அவன் இறந்துவிடுவான். இருக்கின்ற புதையல் எனக்கே என்று ஆடிப்பாடி மகிழ்வுடன் சென்றான்.

அங்கே காவலுக்கு இருந்த சுப்பன் சிந்திக்கலானான். இந்தக் குப்பன் ஏன் நம்முடன் வந்தான் அவனுக்கு எதற்குப் பாதிப் புதையலை நான் தரவேண்டும். அவன் என்ன நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டானா? என்று யோசித்து குப்பனைக் கொல்ல முடிவு செய்தான். கத்தியைக் கூர்மையாகத் தீட்டி மடியில் சொருகி வைத்துக் கொண்டான்.

குப்பன் உணவைக் கொண்டு வந்து வைத்து சுப்பா! சாப்பிடு என்றான். உடனே சுப்பன் புலிபோல் அவன்மீது பாய்ந்து குப்பனை ஒரே குத்தாகக் குத்தி வீழ்த்தினான். குப்பன் குப்புற வீழ்ந்து மாண்டான்.

சுப்பன் பெருமகிழ்ச்சியோடு உணவை உண்டான். அவ்வளவுதான் சுருண்டு வீழ்ந்து மடிந்தான். இருவருமே அளவுக்கு மீறிய ஆசையால் அழிந்தார்கள்.

மாலை அத்துறவி மீண்டும் அவ்வழியே வந்தார். இருபிணங்களையும் கண்டார். அந்தோ! இந்த ஆட்கொல்லி இருவரைக் கொன்றுவிட்டதே! அம்மம்மா! இன்னும் எத்தனை பேரைக் கொல்ல இருக்கிறதோ! பரம்பொருளே! இது பொல்லாத ஆட்கொல்லி! என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஆசையை அறுத்தவர்களுக்கு ஆனந்தம் உண்டு என்று சொல்கிறார் குதம்பைச் சித்தர்

"ஆசை அறுத்தோர்க்கே ஆனந்தம் உண்டென்ற
ஓசையைக் கேட்டிலையோ குதம்பாய்
ஓசையைக் கேட்டிலையோ"

(பாடல். 116)

ஆசை இல்லாத மனிதன் இல்லை. ஆனால், அடுத்தவர் பொருள் மேல் ஆசைப் படுவதே அழிவைத்தரும்.

பிறருடைய பொருளைக் கவர ஆசைப் படுவதால் வரும் பயனை விரும்ப வேண்டாம். அதனால் நன்மை அடைய முடியாது. அது மட்டுமல்ல குறையாத செல்வம் எதுவென்றால், இன்னொருவனுக்குச் சொந்தமான பொருளை அபகரிக்க நினைக்காமல் இருப்பதுதான் என்கிறார் வள்ளுவர்.

இந்த ஆசையினால் நமக்குச் சினம் உண்டாகின்றது. இந்தச் சினத்தைப் பலவீனத்தின் அறிகுறி என்பார் வாரியார். அளவுக்கு மீறிய சினம் அழிவைத் தரும் என்பார் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. இச்சினத்தை வென்றவர்களே ஞானிகளாக முடியும்.

அடிக்கடி சினம் வந்தால் இரத்த அழுத்தம் ஏற்படும். இதிலிருந்து மீள வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?

சினம் வந்தால் அந்த இடத்தை விட்டுஅப்பால் போகவேண்டும் என்கிறார் வாரியார். சுடுகின்ற பாலை மற்றோர் பாத்திரத்தில் மாற்றினால் சூடு ஆறுகிறது. அதுபோல கோபம் வந்தவர்கள் வேறு இடத்திற்குச் சென்றுவிடலாம். ஏனென்றால் சினத்தினால் நாம் செய்வதும, தவிர்ப்பதுவும் நமக்கே தெரியாது. அறிவில் இருள் சூழும் சொல்லத்தகாத சொற்களை வாய் சொல்லும் என்பதால்தான்.

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்."

(குறள். 303)

என்கிறார் வள்ளுவர்.

இந்தச் சினமானது பேசத்தகாத வார்த்தைகளைப் பேச வைக்கும். நாவடக்கம் இன்றிப் பேசும்போது சொற்குற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இருள் சூழும். பகை மூளும் தனிமை உண்டாக்கும் கூடவே பிணிகளும் வந்து

# என் கவிதைகள் பேசப்படுகின்றன



நான்
எழுதிய கவிதைகளை
மீண்டும் மீண்டும் வாசித்துக்கொண்டிருந்த தருணம்
ஜன்னலில்
வந்தமர்ந்த சிறுபறவையொன்று
உற்று நோக்கியபடி கவனித்துக்கொண்டிருந்தது.
அது என்ன நினைத்ததோ?
அதன் கூவலில்
எங்கிருந்தோ பறந்துவந்தது
இன்னொரு பறவை
என்னை பற்றியும்
என் கவிதைகளை பற்றியும்
கதைத்துக்கொண்டிருப்பதை கவனிக்க முடிந்தது
ஒரு பறவையின் சிறகில்
இன்னொன்று சிலாகித்து
கொத்தி கொத்தி
என் காதலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன
அவ்விரண்டும்.

**- தஞ்சாவூர். சாயிராம்.**

நம்மைப் பிடித்துக் கொள்ளும். நான் என்ற அகம் பாவத்தைக் கொடுக்கும் நரகத்தில் கொண்டு சேர்க்கும் என்கிறார் அவர்.

மனித உடலில் கண்கள் இரண்டு, கால்கள் இரண்டு, கைகள் இரண்டு, செவி இரண்டு, மூக்குத் துவாரம் இரண்டு, சுவாசிக்கும் நுரையீரல் இரண்டு, கிட்னி இரண்டு என்று இரண்டு இரண்டாய் இருந்தாலும் அவை ஒரு தொழிலையே செய்கின்றன. கண்கள் இரண்டாயினும் அவை காணும் பொருள் ஒன்றே, கால்கள், இரண்டாயினும் சென்று சேரும் இடம் ஒன்றே, ஆனால் நா ஒன்றுதான் அது செய்யும் செயல் இரண்டு. உணவைச் சுவைப்பதும் நாக்கு, உணர்வை வெளிப் படுத்துவதும் நாக்கு.

உடம்பில் எல்லா பகுதிகளையும் நரம்புடன் படைத்த இறைவன் நா ஒன்றை மட்டும்நரம்பில்லாமல்படைத்தான்என்கிறார் வாரியார்.ஏன்தெரியுமா?நரம்புள்ளபகுதிகள் சுளுக்கிக் கொள்ளும். கை சுளுக்கும் கால் சுளுக்கும் நாவிற்கு நரம்பு இருந்தால் அது பேசும் போதெல்லாம் சொற்குற்றம் ஏற்படுவதோடு சுளுக்கிக்கொள்ளும் என் பதனால்தான் நாவை நரம்பில்லாமல் படைத்தான் இறைவன் என்பார் வாரியார் சுவாமிகள்

இந்த நாவடக்கம் நமக்கத் தேவை!

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."
(குறள். 127)

ஆண்டவன் அளித்த நாவால் அடுத்தவர் களைப் பற்றிக் குற்றங் குறைகளைக் கூறித் திரியக் கூடாது. அப்படிக் கூறும்பொழுது, அவர்கள் மீது இல்லாத குற்றத்தை இருப்பதாகச் சொன்னால் அவர்கள் செய்த பாவத்தில் ஒரு பாதி நமக்கு வந்து சேரும் என்கிறார் வாரியார் சுவாமிகள்.

எனவே, மனத்தழுக்கு இல்லாதபோது அங்கே இறைவன் உட்காருவான் இறைவன் அமர்ந்த உள்ளம் நல்லதையே நினைக்கும். நல்லதைச் செய்யும்போது அழுக்காறு இருக்காது, அளவுக்கு மீறிய ஆசை வராது, கோபம் குறையும்.

இன்னாச் சொல் எந்நாளும் வெளிப் படாது மனத்தில் வஞ்சகம் அழுக்காறு ஆசை முதலிய மாசுடையவர்கள் கூறும் இனிய சொற்கள் உண்மையான இன்சொல்லாக இருக்காது.

மனத்தில் மாசு இல்லாது கூறும் சொற்களே இன்சொற்களாகும் மனத்தூய் மையை கொண்டே இன்சொல் என்று உறுதி கொள்ளமுடியும்.

எனவே, மனத்தூய்மையுடன் வாழ்ந்து இறைவன் திருவருளால் இன்சொல் கூறப் பயின்று நாம் அனைவரும் இம்மை இன்பத்தை அடைந்து வாரியார் சொல்வது போல நற்கதி பெறுவோம்.

"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். "
(குறள். 98)

## ஹைக்கூ

மேகம் வரைந்த காவியம்
நனைகின்றது.
நதியின் நகல்களாக.

இருட்டு
வெளிச்சம் போட்டது.
நகரெங்கும் மின்வெட்டு.

நிதியை நீட்டினால்
நீதி கிடைக்கும்.
வார்த்தையில் மட்டுமல்ல.

வானம் வரைகிறது புதுக்கவிதை.
இடி மின்னல் யாப்பில் லா
மழைக் கவிதை..

சோழபுரம் தாஹா.
சென்னை.16.

# பாரியன்பன் – கவிதைகள்



1.
என் சுமையை
என் மகன் சுமப்பான்
என்றிருந்தேன்.
என் மகன் என்னை
சுமையாய் நினைக்க
பட்டு போனது என்னில்
நம்பிக்கை மரம்.

2.
அபிஷேகம் முடிந்து
ஆராதனை வரை
அமைதியாகக் தான்
இருக்கிறார்.
அர்ச்சகர் பிரசாதம் கொடுக்க
ஆரம்பித்ததும்;
ஆட்களை சேகரிக்கும்
பணியில்
ஆயத்தமாகிறார் கடவுள்.

3.
விடைபெறுதலின்
இறுதி நிகழ்வாய்
உன் கையசைப்பை
எதிர்நோக்கும் வேளையில்
என் கன்னத்தில் செல்லமாய்
முத்தமிட்டுப் பிரிய
நினைவாய் நிழலாடும்
மனக் கடலில்
துள்ளி எழுகின்றன
இன்பப் பேரலைகள்.

4.
கண்ணாடி முன்நின்று
என்னை நான் பார்க்கிறேன்.
என் முகத்தின் ஒவ்வொரு
பாகங்களையும்
அணுவணுவாக ரசிக்கிறேன்.
என்னை வசீகரிக்கிறது
எந்தன் அழகு.

5.
நான் எட்ட நின்று
கோரிக்கை வைக்கிறேன்
கடவுளிடத்தில்.
இந்த வண்டுகளுக்கு
ரொம்பவும் தான் துணிச்சல்;
பூக்களின் கருவறைக்கே
சென்று ரகசியங்கள்
பேசுகின்றனவே...!

**பாரியன்பன்**
குடியாத்தம் - 632602

# வாழ்வி[ய]ல் வசந்தம்!

உள்ளிழுத்து வெளிவரும் - என்
உஷ்ண மூச்சுக் காற்று
இதயத்தின் ரணங்களை
மொழிபெயர்க்கும்!

என் வீட்டு ஜன்னல் கதவு
என் மன ஓலத்தை
எதிரொலிக்க
ஒத்தாசை புரியும்!

காயப்பட்ட என் நெஞ்சம்
வேதனை தாங்காமல்
விம்மித் துடிக்கும்!

நித்திரை வராத
நிலவுப் பொழுதுகளில்
கண்கள் மட்டும்
கண்ணீர் வடிக்கும்!

செத்துப் போன என் வாழ்வு
சில சொப்பனங்களால்
மாத்திரம்
தினம் நகரும்!

யோசித்து வலிக்கும்
என் உணர்வுகள் - எப்போது
நிம்மதியை உணரும்?

கடந்து போன காலங்கள்
உயிரை உடைத்து
வலிகள் தரும்!
ஆனபோதும் நிச்சயமாய்
ஒருநாள் எனக்கு
வசந்தம் வரும்!!!




**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**

# யாசக வாசலிலே

## நிறைமதி நீலமேகம்
### பெண்ணாடம்

இமைகள் வருடிய தாயும் எங்கே
இதயம் தொட்ட உறவுகள் எங்கே
இரக்கம் படைத்த நெஞ்சமும் எங்கே
இளமை வளமை இன்பம் எங்கே..எங்கே...?

தோளில் சுமந்த செல்வங்கள் எங்கே
தேடியச் செல்வங்கள் போனதும் எங்கே
ஓடி யாடி உழைத்த....தெல்லாம்
தேடியும் பார்த்தேன் தெரியவில்லை. இங்கே.!

ஆடி யடங்கும் வாழ்க்கை தனில்
அன்பு பாசம் அனைத்தும் எங்கே..?
முதுமை என்பதும் வேதனை தானோ
முடங்கியே நினைவுகள் சுமக்க தானோ.!

நெற்றியின் வியர்வை சிந்திய நாட்கள்
வெற்றியின் வழியிலே வித்திட நாளும்
பற்றியே சுற்றிய உறவுகள் எல்லாம்
பறந்து போனது மாயமாய் இங்கே...!

சுற்றமும் நட்பும் சூழ்ந்த வாழ்வு
முற்றும் துறந்து போன தெங்கே..?
துளிர்க்கும் இலைக்கு பழுத்த இலையே
பாட மென்பதை மறந்ததும் இங்கே .!

தேடினேன் வயதினை வாடினேன் சற்றே
தள்ளாத வயதில் சொல்லாத வலியில்
இல்லாத உறவை எண்ணியே ஏங்கி
பொல்லாதஉலகம்இதுவெனஉணர்ந்தேன்!

காலம் கடந்தே ஞானம் வத்தது
கலங்கிய மனமும் புரிந்தது நன்று...
வந்திடும் வயோதிகம் தந்திடும் வேதனை
முந்திட முழுதாய் சிந்தித்தல் நன்றே.!

சற்றும தளரா மனமும் உண்டு
முற்றிலு மயர்வு உண்டோ இங்கு..?
உன்னத உழைப்பே ஊன்று கோலாய்
உள்ளம் தளராத உரமும் உண்டு..!

பாடு பட்ட பணத்தின லென்றும்
பாதுகாப்பு உண்டென உணர்ந்திடு.!
நாளைய முதுமை சந்திக்கும் நீங்கள்
பதமாய் இதமாய் பற்றிடல் நன்று.!

யாசக வாசலில் நின்றிட வேண்டாம்
யாசகம் பெற்றும் வாழ்ந்திட வேண்டாம்.!
முதியோர் இல்லம் முளைத்திட வேண்டாம்
மதியும் மயங்கி மரணிக்க வேண்டாம்.!



பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஜூன் 2020



# அடியே நீ அருகிருந்தால்...!

அழகொளிரும் பூமுகத்தில் அந்தி ஒளி வீசுதடி
அடுத்திறங்கும் கருஞ்சடையில் அரவமொன்று நெளியுதடி
மொழு மொழுத்த முன்பரப்பில் முக்காடு போட்டபடி
முயலிரண்டு காத்திருக்கு முன் பக்கம் பாயும்படி!

கழுத்திறங்கும் சிறு நரம்பு கருநீல பச்சையடி
கண்ணிரண்டா யில்லை யில்லை கயலிரண்டு வண்ணமடி
ஒழுகுந்தேன் துளியெல்லாம் ஒன்றிணைந்து சேர்ந்தபடி
ஒட்டியிதழ் மேலிருக்கு ஒழுக நாள் பார்த்தபடி!

தட்டியெடுத்துருட்டி தங்கத்தால் செய்தபடி
தளிருடல் மின்னுதடி தழுவத்தான் ஒத்தபடி
கொட்டிக் கொடுத்தாலும் குறையாது என்றபடி
கொஞ்சங்குழி கண்டபடி கூடி மடி உள்ளதடி!

ஒட்டிக்கிடக்குதடி உடலிடுக்கின் ஓரழகாய்
உந்தனிடை பார்க்க அது ஊர்ந்தசையும் முல்லையடி
கட்டிப்போட்டாலும் காவல் மனங் கொண்டாலும்
எட்டியெட்டி தாவுதடி எண்ணமுனை தொட்டபடி!

இரவென்றும் பகலென்றும் எனக்கேது மில்லையடி
இது உன்னை நான் காண எழுந்த பெரும் தொல்லையடி
வருவதும் போவதும் வாடிக்கை என்றபடி
வந்து நீ போவதனால் வளர் காதல் வட்டியடி!

புற அழகுச் சுவையெல்லாம் புளிப்பேறிப்போச்சுதடி
புள்ளி வைத்த உன்னழகே பூமியெனக்காச்சுதடி
அற அழகுத் தழைப்பதற்கு அருகில் நீ வேண்டுமடி
அடியே நீ அருகிருந்தால் அடுத்து வரும் சொர்க்கமடி!

**- பொன்மணிதாசன்**